
இன்பத்தை அள்ளித்தரும்
இந்துமதம்
9
தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்

# இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம்

## பாகம் - 9

தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்.

# என்னுரை

இந்துசமய நூல்கள் பலவற்றைக் கற்றதால் அதன் உட்பொருளை உணர்ந்து அவற்றை உங்களின் பார்வைக்கு வைக்கிறேன். இவை யாவும் கற்றதாலும், அனுபவத்தாலும் ஏற்பட்டவை.

இந்நூலின் எழுத்துப்பிழைகளை நீக்கிச் சீர்செய்து தந்த ஆசிரியை செல்வி இறைமகள் பரநிரூபசிங்கம் அவர்களுக்கும், ஓய்வு பெற்ற அதிபர் திரு. வா. ஜெயரத்தினம் அவர்களுக்கும், கணனியில் வடிவமைத்துத் தந்த செல்வி. க. தேனமிர்தம் அவர்களுக்கும், இந்நூலைப் பதிப்பிக்கும் லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். மீண்டும் சந்திப்போம்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

அன்புடன்
கே. வி. குணசேகரம்.
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்.

# சூரியன்.

மனிதன் தோன்றிய காலம் முதல் இயற்கையை வழிபட்டு வருகிறான். இந்த வகையில் சூரியன், சந்திரன், அக்கினி, பூமி போன்றவற்றை இந்துக்கள் மட்டுமன்றி வேறு சமயத்தவர்களும் வழிபட்டு வந்துள்ளனர்.

அக்கினியின் ஒரு வடிவம் தான் சூரியன் என்று இந்து சமய ஞானிகள் கூறியுள்ளனர்.

வேதங்களில் பல தெய்வ வழிபாடு இருந்த போதும் அதில் மிகவும் முக்கியமான தெய்வமாகவும், மக்களின் பேரின்ப வாழ்விற்கு உதவுபவனாகவும் சூரியன் கருதப்படுகிறான்.

சூரியன் தான் இயற்கையான ஒளிபடைத்தவன். ஏனைய வையெல்லாம் சூரியனில் இருந்து ஒளியைப் பெற்றே ஒளிர்கின்றன. இருப்பினும் அவை சூரியன் உதிக்கும் போது ஒளி இழந்தவையாகவே காணப்படுகின்றன.

சூரியனைக் கண்டதும் இருள் அஞ்சி விலகிவிடுகின்றது என்றும், கீழ்வானத்தில் அவன் முளைத்து விட்ட பின்பே உயிரினங்கள் அனைத்தும் இயங்குகின்றன என்றும் இருக்கு வேதம் கூறுகிறது.

மனிதர்களில் பலருக்குப் பகல் வேளை போதாதிருக் - கிறது. முயற்சியுடையவன் எப்பொழுதும் பகலையே விரும்புவான். வேதகால மக்கள், பகைவர்களும், கொடிய மிருகங்களும் தம்மை இரவில் தாக்குவதால் இரவை வெறுத்தனர். அதனால் வேதகால மக்கள் பகலை விரும்பினர்.

அத்துடன் ஒளிதரும் பொருட்களையெல்லாம் தெய்வமாக நினைத்துத் தொழுதனர்.

இருக்கு வேதம் பத்து மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. இதில் 1028 சூத்திரங்கள் இருக்கின்றன. இதில் சூரியனைப் பற்றிய தகவல்கள் ஐந்தாவது மண்டலத்தில் விபரமாக உள்ளன. அதில் உள்ள பாடல்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

“சூரியனே உலகை ஆழ்பவன்.

அவனே எல்லாம் அறிந்தவன்.

சக்திகள் அனைத்தும் பெற்றவன்.

உயிர்களுக்குச் ஆசிரியன் அவன்”.

உயிர்களுக்குத் தேவையான அத்தனை பொருட்களையும் படைப்பவன்.

இருளின் திரையை விலக்கி ஒளிர்கதிர்களை மனித மனங்களில் உருவாக்குபவன்.

அறிவுப் பசியை ஊட்டுபவன்.

வயிற்றுப் பசியை நீக்குபவன்

தொழில்கள் பலவற்றையும் உருவாக்குபவன்.

உலகில் நடைபெறும் நன்மை தீமைகளைக் கண்காணிப்பவன்.

தீயவர்களை ஒடுக்கி நல்லவர்களை வாழச் செய்பவன்.

பிரகத் ஆரணிய உபநிடதம் காலத்தால் முந்தியது. இது மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

இம் மூன்று பாகங்களையும் மது, யக்ஞவல்லியர், கீலர் என்ற முதுபெரும் ஞானிகள் இயற்றியதாகக் கூறப்படுகிறது.

அதனால் அம்மூன்று பாகங்களும் இவர்களின் பெயராலேயே வழங்கப்படுகின்றன.

முதலாவது ‘மதுகாண்டம்’ என்றும்,

இரண்டாவது ‘யக்ஞவல்லியர் காண்டம்’ என்றும்

மூன்றாவது ‘கீலகாண்டம்’ என்றும் வழங்கப்படுகின்றன.

மதுகாண்டம் உலகத்தை ஒரு பந்தயக் குதிரையாக உருவகப்படுத்தியுள்ளது. அந்தக் குதிரையின் கண்கள் சூரியன் ஆகும்.

அதுபோல அறக்கடவுளின் கண்களாகச் சூரியனும் சந்திரனும் இருந்து பகலும் இரவும் உலகில் நடைபெறும் நன்மை தீமைகளைக் கண்காணிக்கிறார்களென்றும், அதன் மூலம் பாவம் செய்பவர்களுக்குத் தண்டனைகளும், புண்ணியம் செய்பவர்களுக்கு வெகுமதியும் அளிப்பதாக இருக்கு வேதம் கூறுகிறது.

சூரிய ஒளியில் நோய்களைத் தீர்க்கும் சக்தியுண்டு. அதனால் சூரிய ஒளியை ‘மருந்து’ என்று பழந்தமிழ் நூல்கள் சொல்கின்றன.

காலையில் சூரியன் உதிக்கு முன் எழுந்து காலைக் கடன்களை முடித்துவிட்டுக் குளித்த பின் சூரியனைப் பார்த்தால் கண்களில் உள்ள நோய்கள் யாவும் குணமாகும்.

சூரிய வழிபாட்டின் போது காயத்திரி மந்திரத்தை ஓதினால் செல்வங்களைப் பெறலாம். அதற்காகக் காயத்திரி மந்திரத்தைத் தருகிறேன்.

“ஓம் பூர்புவ ஸ்வக தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோனத் ப்ரசோதயாத்”

பண்டையகாலத்தில் காலையில் முனிவர்கள் ஒற்றைக்காலில் கிழக்கு நோக்கி நின்று சூரியனை வழிபட்டனர், அப்போது காயத்திரி மந்திரத்தை ஓதியதாகவும் பழைய நூல்கள் கூறுகின்றன. சூரியன் மிகுந்த சக்தி வாய்ந்த தெய்வம் என்று விவசாயிகள் இன்றும் நம்புகின்றனர். அதனால் அவர்கள் தைமாதம் முதலாம் நாளில் பொங்கலிட்டுப் படைக்கின்றனர். அத்துடன் ஞாயிற்றுக் கிழமைகளில் சூரிய வழிபாடு செய்கின்றனர்.

சூரியனைக் கொண்டு தான் காலம் கணிக்கப்பெறுகிறது.

சித்திரை, வைகாசி மாதங்கள் வசந்த ருதுக்காலம் எனப்படும். இதை இளவேனிற் காலம் என்றும் சொல்லப்படும்.

ஆனி, ஆடி மாதங்கள் கிரீஸ்ம ருதுகாலம் எனப்படும். இதை முதுவேனிற்காலம் என்றும் சொல்லப்படும்.

ஆவணி, புரட்டாதி மாதங்கள் கார்காலம். இதை வருஷருது என்றும் சொல்லப்படும்.

ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் கூதிர்காலம். இதை சரத்ருது என்றும் சொல்லப்படும்.

மாசி, பங்குனி மாதங்கள் பின்பனி காலம். இதைச் சசிருது என்றும் சொல்லப்படும்.

தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆகிய ஆறு மாதங்களும் உத்தராயண காலம் ஆகும். உத்தராயண காலத்தில் சூரியன் தெற்கில் இருந்து வடக்கு நோக்கிச் செல்வான். இக்காலம் தேவர்களுடைய பகற்பொழுதாகும். இக்காலத்தில் இறப்பவர்களுக்கு மறு பிறப்பில்லை என்று பகவத்கீதை சொல்கிறது.

ஆடி, ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய ஆறு மாதங்களும் தட்சிணாயண காலமாகும். இவ்வாறு

மாதங்களும் சூரியன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் செல்வான். இவ் ஆறு மாதங்களும் தேவர்களுக்கு இரவுப் பொழுதாகும்.

பகவத்கீதையின் எட்டாம் அதிகாரமான அக்ஷரப்ப்ரஹ்ம யோகத்தில் உள்ள 23ஆம், 24ஆம், 25ஆம், 26ஆம் சுலோகங்கள் இவ்வாறு கூறுகின்றன.

“பரத குலப் பெருமகனே, எக்காலத்தில் உடலை விட்டுப் போகின்ற யோகிகள் முத்தியடைகின்றனரோ, எக்காலத்தில் போகின்றவர்கள் பிறக்கின்றனரோ, அக் காலத்தைச் சொல்கின்றேன்”

“தீ, ஒளி, பகல், சுக்கிலபட்சம், உத்தராயணத்தின் ஆறு மாதங்கள் இவைகளில் உடலை நீத்துப் போகின்ற பிரம்ம ஞானிகள் பிரம்மத்தை அடைகின்றார்கள்”.

“புகை, இரவு, கிருஷ்ண பட்சம், தட்சணாயணத்தின் ஆறு மாதங்கள் இவைகளில் உடலை நீத்துப் போகின்ற யோகிகள், சந்திரனது ஒளியைப் பெற்றிருந்து மறுபிறவி அடைகிறார்கள்”.

“ஒளியும், இருளும் ஆகிய இவ்விரண்டு வழிகள் இயற்கையில் என்றென்றும் உள்ளவை. ஒன்று பிறவாமைக்குக் காரணமாவது, மற்றது பிறப்பைத் தருவது”.

சூரிய உதயத்தைக் கொண்டு தான் உலகில் நடைபெறும் செயல்கள் கணிக்கப்படுகின்றன. சூரிய பகவான் சித்திரை மாதத்தின் முதலாவது நாளன்று காலபுரிஷனின் முதல் ராசியான மேடராசிக்குச் செல்வார். அவர் ஓர் இராசியைக் கடக்கஒரு மாதமாகும். இப்படிப் பன்னிரண்டு

இராசிகளையும் அவர் கடக்க பன்னிரண்டு மாதங்கள் செல்லும். இதைக் கொண்டுதான் யாவும் கணிக்கப்படுகின்றன.

ஒரு ஜாமம் என்பது 2 மணித்தியாலம் 24 நிமிடங்களைக் கொண்டது. ஒரு நாளில் பத்து ஜாமங்கள் உண்டு. ஆறு நாழிகைகள் கொண்டது ஒரு ஜாமம்.

தினமும் ஒரு மணி நேரத்திற்கு ஒரு ஹோரை வீதம், சூரியன், அக்கினி, சந்திரன், சனி, குரு, செவ்வாய் என ஒருநாளிற்கு ஏழு ஹோரைகள் உண்டு. அன்று என்ன கிழமையோ, அந்தக் கிழமைக்குரிய கிரகத்திற்குரிய ஹோரை தான் காலையில் முதலில் வரும். சூரிய பகவானுக்குரிய தினம் ஞாயிற்றுக் கிழமையாகும். அன்று காலை ஆறு மணி தொடக்கம் ஏழு மணி வரை சூரிய ஹோரை வரும். இது போலத் திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனிக் கிழமைகளில் முறையே சந்திரஹோரை, செவ்வாய்ஹோரை, புதன் ஹோரை, குரு ஹோரை, வெள்ளிஹோரை, சனி ஹோரை என்பன முதலில் வரும்.

இது போலவே ராகு காலமும் கணிக்கப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 – 6.00 மணிவரை

திங்கள் காலை 7.30 – 9.00 மணிவரை

செவ்வாய் பகல் 3.00 – 4.30 மணிவரை

புதன் பகல் 12.00 – 1.30 மணிவரை

வியாழன் பகல் 1.30 – 3.00 மணிவரை

வெள்ளி காலை 10.00 – 12.00 மணிவரை

சனி காலை 9.00 – 10.30 மணிவரை

எமகண்டமும் சூரிய உதயத்தைக் கொண்டே கணிக்கப்படுகிறது.

ஞாயிறு பகல் 12.00 – 1.30 மணிவரை

திங்கள் காலை 10.30 – 12.00 மணிவரை

செவ்வாய் காலை 9.30 – 10.30 மணிவரை

புதன் காலை 6.00 – 7.30 மணிவரை

வியாழன் காலை 6.00 – 7.30 மணிவரை

வெள்ளி பகல் 3.00 – 4.30 மணிவரை

சனி பகல் 1.30 – 3.00 மணிவரை

இது தவிர இந்துக்கள் பேணும் திகதிகள், நட்சத்திரங்கள், மாளய பட்சங்கள், விழாக்கள், பூசைகள் யாவும் சூரிய உதயத்தைக் கொண்டே கணிக்கப் பட்டிருக்கின்றன.

சூரியனைக் கொண்டே உலகில் நடைபெறும் சகல செயல்களும் கணிக்கப்பெறுவதால் வள்ளுவர் சூரியனைப் போற்றிப் பாடியுள்ளார்.

அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.

உலகில் உள்ள எழுத்துக்களெல்லாம் ‘அ’ என்ற எழுத்தை முதலாகக் கொண்டது போல, உலகம் சூரியனை முதலாகக் கொண்டது.

“சூரியனைப் புகழ்ந்து பாடும் பாடல் இது.

விளக்குதண்டி முதலோராற் சேவிக்கப் படுவோன்
விமலன்முத னாற்சிங்க பதாசனத்தின் மேலோன்
களங்கமிலாத் தீத்தைமுதற் சக்திகண சகிதன்

கருதருண மணியொளியன் கடோற்கான்ம மூர்த்தி
துளங்கலிறன் னங்கந்தன் னங்கமெனுங்கிரகந்
தொகுமுடுவா தியசூழச் சுவேதகஞ்சத் திவர்ந்தோன்
வளங்கொள்கவே தாம் புசத்தோட் கரனிருநன் விழியோன்
வருசிவ சூரியன்காக்க மகிழ்ந்தடியேங் களையே''

சூரியன் சகல வல்லமைகளையும் கொண்டவன்; தயாள குணமுள்ளவன்; தானியங்கள் யாவும் உருவாகக் காரணமானவன் என்பதால் விவசாயிகள் அனைவரும் சூரியனைப் போற்றிப் பொங்கிப் படைக்கின்றனர். அத்துடன் மற்றத் தொழிலாளர்களும் விவசாயி மூலம் தமக்கு உணவு தருபவன் சூரியன் என நினைத்துத் தாமும் சூரியனைப் போற்றிப் பொங்கிப் படைக்கின்றனர்.

அதர்வண வேதத்தில் உள்ள பிரஸ்னா என்ற உபநிடதம் படைப்பைப் பற்றி இவ்வாறு கூறுகிறது.

''பிரஜாபதியாகிய பிரம்மத்தில் இருந்தே உயிர்கள் அனைத்தும் தோன்றின. தனிமையில் இருந்த பிரஜாபதியான பிரமம் படைப்புத் தொழிலைச் செய்வதற்காகப் பலகாலம் தவஞ்செய்தது. அதன் பலனாக இரு பொருட்கள் தோன்றின. அவற்றுள் ஒன்று ஆண், மற்றது பெண்.

''அந்த இரண்டினுள் ஆண் சக்தி, பெண் வஸ்து. உடலை உருவாக்கும் சக்தியே பிராணனை வழங்கும். சக்தி சூரியனுடன் தொடர்பு கொண்டது. வஸ்து சந்திரனுடன் உறவு கொண்டது. இந்த இரண்டின் இணைப்பில் தான் ஜீவன்கள் தோன்றின''

இந்த இரண்டு பொருட்களுள் சூரியனின் சக்தி தான் இன்றியமையாதது. அவனிடம் தான் அறிவாகிய ஒளி மயமான

கதிர்கள் இருக்கின்றன. இக்கதிர்களை அடைந்தால் மறுபடியும் பிறப்பதைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

முண்டகஉபநிடதம் சூரியனைப் பற்றி இவ்வாறு கூறுகிறது; ‘‘பிரம்மத்தின் தலை அக்கினியாகும். சூரியனும் சந்திரனும் அவனது கண்கள். திசைகள் அவனது காதுகள்’’.

இருக்கு வேதம் விராட புரிஷனின் கண்களில் இருந்து சூரியன் தோன்றியதாகக் கூறுகிறது.

புராணங்களும் இதிகாசங்களும் சூரியனுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கின்றன.

பாரதக்கதையில் வரும் கர்னன் சூரியனின் அனுக்கிரகத்தினால் பிறந்தவன்.

பாரத யுத்தத்தின் போது திட்டத்தூய்மனை அரிச்சுனன் ‘பொழுது சாயுமுன் கொல்லவேன். இல்லாவிட்டால் தீக்குளித்து இறப்பேன்’ எனச் சபதம் செய்திருந்தான். இதை அறிந்த திட்டத்தூய்மன் மலை உச்சியில் ஏறிச் சூரியன் அஸ்தமனமாகும் வரை மறைந்திருக்கிறான். சூரியன் அஸ்த்தமனமானால் சபதப்படி அரிச்சுனன் தீக்குளித்து இறந்து விடுவானென நினைத்த கண்ணன் சூரிய தேவனை அன்று அஸ்த்தமனமாவதற்குச் சில நிமிட நேரங்களுக்கு முன் மறையும்படி கோருகிறான். அதன்படி சூரியன் மறையத் திட்டத்தூய்மன் மலை உச்சியில் இருந்து வெளிப்படுகிறான். அதைக்கண்ட கண்ணன் அர்ச்சுனனை நோக்கி; ‘‘திட்டத்தூய்மனைக் கொல்’’ என்று கூறுகிறான். உடனே அரிச்சுனன் வில்லை எடுத்து நாண்பூட்டி திட்டத்தூய்மனை நோக்கி எய்கிறான். அந்த அம்பு குறிதவறாது சென்று திட்டத்தூய்மனைக் கொல்கிறது.

பாரதக்கதையில் பாண்டுவின் வம்சம் 'சூரியவம்சம்' என்று கூறப்படுகிறது.

வேதப்பாடலாசிரியர்கள் சூரியனைப் பற்றி விதந்து பாடியதைப் போல விடியலைப் பற்றியும் மிகவும் சிறப்பாகப் பாடியுள்ளனர்.

இப்பாடல்கள் யாவும் சூரியனை வரவேற்றுப் பாடுவதாகவே உள்ளன. சூரியனால் தான் உலகம் வாழ்கிறது என்று உணர்ந்த வேதப்பாடலாசிரியர்களின் கற்பனை மிகுந்த சுவையுள்ளனவாக இருப்பதைக் காணலாம். அதில் சிலவற்றைத் தருகிறேன்.

"மக்களே விழித்தெழுங்கள்
வெளிச்சம் வந்துவிட்டது
அழகான மனதிற்கு ரம்மியமான வெளிச்சம்
புத்திக்கூர்மையுடன் மிகவும் பரந்ததாகவும் உள்ளது
சூரியனின் வருகையின் ஆரம்பம் தொடங்கிவிட்டது
இரவின் கொடுமை மறைய
இன்பம் பூவுலகைச் சூழ்கிறது
அதன் வரவை வரவேற்க
உயிரினங்களே தயாராகுங்கள்
அழகான பொன் நிறத்தில்
பல்வகை வடிவங்களில்
ஒவ்வொரு தினமும்
கிழக்கில் தோன்றும் வெளிச்சம்"

"சொர்க்கத்தின் தேவதை எம்முன் வந்துவிட்டாள்
பளபளப்பான ஆடையுள் மறைந்த மோகினி
நாணத்துடன் முகம் சிவக்கிறாள்

பருவப் பெண்ணாய் வளர்ந்து
உலகில் உள்ள யாவற்றையும் தரப்போகிறாள்
பவித்திரமானவளே உனது
சம்பத்துக்கள் அனைத்தையும் உயிர்களுக்குக் கொடு''

இவ்வாறு இருக்கு வேதம் சூரியனைப் பற்றிக் கூறுகிறது.

யசுர்வேதத்தின் சுக்கிலயசுர் என்ற பகுதி சூரியனைப் பற்றி இவ்வாறு கூறுகிறது.

''சூரியதேவனே எமது செல்வம் பசுக்கள். நீதான் எமது பசுக்கூட்டங்களைப் பாதுகாத்தல் வேண்டும். அவற்றையும் எம்மையும் உன் கதிர்களான கண்களால் பார்த்துக் கொண்டிருக்கிறாய். அதனால் அவற்றிற்குண்டாகும் தீமைகள் யாவும் உனக்குத் தெரியும். அத்துடன் அவற்றிற்கும் எமக்கும் உணவு தருபவன் நீ. எமது செல்வங்களுக்கு உண்டாகும் நோய்களையும், துன்பங்களையும் நீக்கு. அவற்றிற்கு எதிரிகளிட -மிருந்து ஆபத்து நேராமல் காப்பாற்று''

இவ்வாறு சூரியன் வேதங்களால் போற்றப்படுகிறான். அதனால் வேதங்களைப் போற்றும் இந்துக்கள் சூரியனைக் கண்கண்ட தெய்வமெனக் கருதி வணங்கி வருகின்றனர். முருகன், வைரவர் போலச் சூரியனும் சிவனின் அவதாரம் என்று இந்துதர்ம நூல்கள் கூறுகின்றன. அதுபோல, பகவத்கீதையின் வீபூதி யோகத்தில், 'ஒளிர்பவைகளுள் நான் சூரியன்' என்று மஹாவிஷ்ணு கூறுகிறார். வலிமையும், கொடையளிக்கும் வல்லமையும் நிறைந்த சூரியன் உயிர்கள் அனைத்தும் கண்ணால் கண்டு வணங்கக்கூடிய தெய்வமாகும். அதனால் மக்களெல்லோரும் வல்லமை மிகுந்த சூரிய பகவானை வணங்கிப் பெருவாழ்வு பெறவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

# இந்து சமயங்களில் சாதி

ஆரியர் வருகைக்கு முன் பண்டைய இந்தியாவில் சாதிகள் இருந்தமைக்கான குறிப்புக்கள் எவையும் நூல்களில் இருக்கவில்லை.

ஆரியர் வந்தபின்பு வேதங்கள் இயற்றப்பட்டன. அவ் வேதங்களிலும் சாதிகள் இருக்கவில்லை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சாதி அமைப்பை இந்து சமயங்கள் எவையும் கூறவில்லை.

வேதம் மனிதர்களின் வாழ்நாளை நான்கு கட்டங்களாக வகுத்தது. முதலாவது பிரம்மச்சாரியம், இரண்டாவது கிருகஸ்ரமம், மூன்றாவது வானப்பிரஸ்தம், நான்காவது சன்நியாசம்.

இது போல மனிதர்களையும் நான்கு வர்ணத்தினராக வேதம் பிரித்து வைத்துள்ளது. முதலாவது பிரிவைச் சேர்ந்த மனிதர்கள் பிராமணர்கள், இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர்கள் சத்திரியர்கள், மூன்றாவது பிரிவைச் சேர்ந்தவர்கள் வைசிகர்கள், நான்காவது பிரிவைச்சேர்ந்தவர்கள் சூத்திரர்கள்.

இப்பகுப்பு கல்வியையும், வீரத்தையும் மட்டும் அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்டது.

வேதத்தை இயற்றிய உயர் சாதிக்காரர்கள் என்றில்லை. வேதப்பாடல்களைச் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும் ஆக்கியுள்ளனர்.

வேதகாலத்தில் இரு வர்ண மக்கள் வாழ்ந்தனர். மத்திய ஆசியாவில் இருந்து வந்து சிந்து நதிக்கரையோரத்தில் குடியேறிய ஆரியர்கள் வெள்ளை நிறத்தவர்களாகவும், சிந்து

நதிக்கரையில் வாழ்ந்த பழங்குடி மக்கள் கறுப்பு நிறத்தவராகவும் இருந்தனர்.

பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற பிரிவைச் சேர்ந்த நான்குவகை மக்களும் இரு வர்ணத்தைச் சார்ந்தவர்களாகவே ஆரம்பத்தில் வாழ்ந்தனர். மக்கள் தொகைப் பெருக்கமும், மனிதர்களின் தேவையும் அதிகரிக்க அதிகரிக்க முயற்சியுள்ளவர்கள் பெரும் பொருள்களைத் தேடினர்; சிலர் முயற்சியால் கல்வியறிவைப் பெற்றனர்; சிலர் வீரத்தினால் மக்களை அடக்கினர்.

இதன்படி கல்வி கற்றவர்கள் பிராமணர்கள் என்றும், செல்வந்தர்கள் வைசிகர் என்றும், வீரர்கள் அரசர்களென்றும் பகுக்கப்பட்டனர். கல்வி, செல்வம், வீரமில்லாதவர்கள் மற்றவர்களை நம்பி அவர்களுக்குத் தொண்டு துரவுகள் செய்து வாழ்ந்தனர். இவர்கள் சூத்திரர்கள் ஆவர்.

சூத்திரன் ஒருவன் தனது வீரத்தால் அரசனாவதும், அவன் பின் பெரு வணிகனின் மகளைத் திருமணம் செய்வதும் வழக்கில் இருந்தது. அரசன் பிராமணப் பெண்ணையும் திருமணம் செய்தான்.

இந்த வகையில் சூத்திரர்களின் அதாவது ஏவல் வேலைகளைச் செய்வோரின் பெண்பிள்ளை மிக்க அழகியாக இருந்தால் அவளை அரசன் அல்லது பெரும் பொருளை உடையவன் அல்லது கல்வி கற்றவன் விரும்பித் திருமணம் செய்யலாம். அழகிற்கும், கல்விக்கும், வீரத்திற்கும் அந்நாளில் சாதி இருக்கவில்லை.

வேத காலத்தில் பிறப்பின் அடிப்படையில் எந்தத் தொழிலும் நடைபெறவில்லை. இருக்கு வேதத்தின் இரண்டாவது மண்டலத்தில் உள்ள பாடல்களைப் பாடியவர் விசுவாமித்திரர்.

இவர் சத்திரியர். அப்படியிருந்தும் அவர் பெரும் கல்விமானாகத் திகழ்ந்தார். அத்துடன் இவர் ஒரு படகோட்டும் பெண்ணைத் திருமணம் செய்தார்.

வேத காலத்தில் ஒரு பிரிவினர் சமைத்த உணவை மற்ற மூன்று பிரிவினரும் ஏற்று உண்டனர். திருமண விடயத்திலும் வேதகால மக்கள் வேற்றுமை பார்க்கவில்லை. வேதகாலத்தில் வாழ்ந்த குடும்பம் ஒன்றில் ஒருவன் வைத்தியனாக இருந்தான் இன்னொருவன் சமையல்காரனாக இருந்தான் என்ற குறிப்பு உண்டு.

இதைத்தவிர வேதகாலத்தில் வேதத்தை யாரும் கற்கலாம் என்ற நிலையும் இருந்தது. அதற்கு உதாரணமாகச் சாந்தோக்கிய உபநிடதத்தில் வரும் கதை ஒன்றைப் பார்ப்போம்.

கௌத்தம முனிவரிடம் சத்தியகாமன் என்ற மாணவன் வேதம் கற்பதற்காக வந்தான்.

கௌத்தம முனிவர் அவனை ஆசனத்தில் இருத்தி; ‘‘உனது தந்தையின் பெயர் என்ன?’’ என்று கேட்டார்.

சத்தியகாமனுக்குத் தனது தந்தையின் பெயர் தெரியவில்லை. அதனால் முனிவர்; ‘‘மகனே, நீ சென்று உன் தாயாரிடம் கேட்டுவா’’ என்று சொன்னார்.

சத்தியகாமன் தாயாரிடம் சென்று தனது தந்தையைப் பற்றிக் கேட்டான்.

அதற்குத் தாய் சொன்னாள்; ‘‘மகனே, எனது யெபர் ஜாபாலி. நான் பல வீடுகளுக்குச் சென்று கூலி வேலை செய்து பிழைப்பவள். அப்பொழுது நீ பிறந்தாய். அதனால் உனது தந்தை யார் என்பதையும், அவரது பெயர் என்ன என்பதையும்,

அவரது குலம், கோத்திரம் என்பதையும் நான் அறியேன். நீ முனிவரிடம் சென்று, 'நான் ஜாபாலி மகன் என்றும், எனது பெயர் சத்தியகாமஜாபாலி'' என்றும் சொல் என்றாள்.

அன்னையிடம் இருந்து தனது பிறப்பைப் பற்றித் தெரிந்துகொண்ட சத்தியகாமன் முனிவரிடம் ஓடிச்சென்று, தனது தாய் கூறியவற்றைக் கூறினான்.

முனிவர் சொன்னார்; ''மகனே, வேதம் கற்பதற்குக் குலம் முக்கியமானது. ஆனால் அதைவிட முக்கியமானது குணம். அது உன்னிடமும், உனது தாயிடமும் இருக்கிறது. பொய்யை மறைத்து அதை உண்மையெனச் சொல்லும் கீழ்த்தரமான குணம் உன்னிடம் இல்லை. நீ உயர்ந்தவன் என்பதற்கு அடையாளம் உனது தாய் சொன்ன வார்த்தைகள். அதனால் உனக்கு நான் வேதத்தைக் கற்றுத்தருகிறேன்'' என்றார் கௌதம முனிவர்.

வேதத்திற்குப் பின்பு தான் சாதி முறைகள் உண்டாயின. அதன் பின்பு தான் உயர்ந்த குலத்தில் உள்ளவர்கள் மட்டும் தான் வேதங்களையும் உபநிடதங்களையும் கற்கலாம் என்ற நிலை வந்தது. இதற்குக் காரணம் பொருளாதார வளர்ச்சியே. பெரும் பொருளுள்ளோர் கூலிக்காக வேலை செய்வோர் தம்முடன் சமமாக இருப்பதை விரும்பவில்லை. இதிலிருந்து தான் உயர்வு தாழ்வு என்ற நிலை உருவானது. இதன் பின் உயர்ந்தவன், தாழ்ந்தவனெனத் தான் நினைப்பவனை மதிப்பதில்லை; அவனது வீட்டிற்கும் செல்வதில்லை.

வேதத்தில் சாதி முறை இருந்ததில்லை என்றும், அதன் பின் உபநிடதங்கள் எழுந்த போது தான் சாதிமுறைகள்

சமூகத்தில் புகுத்தப்பட்டனவென்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

புரிஷசூத்தம் மனிதர்களைப் பிரம்மம் எவ்வாறு படைத்த தென்று விளக்குகிறது.

பிரம்மத்தின் முகத்திலிருந்து பிராமணனும், தோள்களிலிருந்து சத்திரியனும், தொடையிலிருந்து வைசிகனும், காலிலிருந்து சூத்திரனும் தோன்றியதாகக் கூறுகிறது.

சாதிப்பிரிவினை உருவான பின் பிராமணன் தான் உயர்ந்தவன் என்ற நிலை உருவாகியது. உபநிடதங்கள் உருவாகும் போது இந்த நிலை இருந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதற்கு உதாரணமாக முண்டக உபநிடதத்தின் சில சுலோகங்களை எடுத்துக் கூறுகின்றனர்.

முண்டக உபநிடதம் பிரமத்தின் கால்கள் தான் இவ் உலகம் என்று அழுத்திச் சொல்கிறது. அத்துடன் பிரமத்தின் கால்களில் இருந்து தோன்றிய சூத்திரனே உலகிற்கு உரிமையானவன் என்றும் கூறுகிறது.

அறிவில் உயர்ந்த அறிவு, தாழ்ந்த அறிவு என இரண்டு வகையுண்டு. கல்வி கற்பதால் வருவது தாழ்ந்த அறிவு. பண்பால் உருவாவது உயர்ந்தஅறிவு. 'நான்கு வேதங்களையும், உபநிடதங்களையும் கற்றுவிட்டு ஒழுக்கமில்லாது இருப்பவன் தாழ்ந்தவன். கற்காவிட்டாலும் ஒழுக்கத்துடன் வாழ்பவன் உயர்ந்தவன்' என்று முண்டக உபநிடதம் சொல்கிறது.

பண்பு அல்லது குணம் என்பது ஒருவனது ஒழுக்கத்திலிருந்து வருவது. பண்பாளனாக இருப்பதற்குக் குலமோ, கல்வியோ தேவையில்லை. நல்லவற்றைச் செய்பவன்

குணவாளன். நல்லவற்றைச் சொல்வோர் நல்ல குணமுடைய வர்கள் அல்லர் என்றும் முண்டக உபநிடதம் சொல்கிறது.

நல்ல குணமுடையவன் கடவுளை அடைய வேதத்தை ஓதத்தேவையில்லை என்றும் அதற்கான சடங்குகள் எவையும் செய்யத் தேவையில்லையென்றும் முண்டக உபநிடதம் சொல்கிறது. ஒழுக்கமில்லாதவர்கள் வேதங்கள் ஓதி, சடங்குகள் செய்தாலும் அவர்கள் பிரம்மத்தை அடையாது மீண்டும் மீண்டும் மூப்பையும் மரணத்தையும் அனுபவிப்பார்கள் என்றும் முண்டக உபநிடதம் சொல்கிறது.

எல்லா நதிகளும் இறுதியில் கடலுடன் சங்கம மாகின்றன. கடலில் கலந்த பின்பு அந்நதிகளின் பெயர்கள் யாவும் இல்லாமல் போய்விடுகின்றன. இது போலப் பிரம்மத்துடன் கலக்கும் ஆன்மாக்களும் தமது பெயர்களையும், குலங்களையும் இழந்துவிடுகின்றன. கடலோடு கலந்த நதியைப் போல பிரம்மத்துள் கலந்த ஆத்மாவுக்குப் பூவுலகில் உள்ள அனைத்துத் தன்மையும் இல்லாது போய்ப் பிரம்மத்தின் தன்மை வந்துவிடும். இதனால் பூமியில் அவ்வாத்மாவுக்குச் சாதியில்லை என்றும் முண்டக உபநிடதம் கூறுகிறது.

இதைப் பகவத்கீதையும், திருக்குறளும் கூறுகின்றன.

பகவத்கீதையின் ஞானகர்மசந்யாச யோகத்தின் 17ஆம், 18ஆம், 19ஆம், 20ஆம், 21ஆம், 22ஆம், 23ஆம் சுலோகங்கள் இவ்வாறு கர்மத்தைப் பற்றிக் கூறுகின்றன.

“கர்மத்தின் போக்கைத் தெரிந்துகொள்ளல் வேண்டும். விலக்கப்பட்ட கர்மங்கள் எவையெவை என்பதையும் தெரிந்து கொள்ளல் வேண்டும். கர்மத்தின் போக்கு அறிதற்கரியது”.

“காமத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் காண்போன் மக்களுள் மேதாவி; அவனே யோகி; அவனே எல்லாம் செய்து முடித்தவன்”.

“எவனது கர்மங்கள் எல்லாம் ஆசையும் சங்கற்பமும் அற்றனவோ, அவனைப் பண்டிதன் என்று ஞானிகள் பகர்கிறார்கள்”.

“வினைப்பயனில் பற்றற்றவனாய், நித்திய திருப்த்தனாய் எதையும் சாராதவனாக இருப்பவன் கர்மத்திலீடுபட்டாலும் அவன் கர்மம் செய்தவன் அல்லன்”

“ஆசையற்றவன், மனதையும் உடலையும் அடக்கியவன், உடைமைகளைத் துறந்தவன், வெறும் உடலால் வினையாற்றுபவன் பாவத்தை அடைவதில்லை”

பற்றில்லாதவனாய், முத்தனாய், ஞானத்தில் மனதை உறுதிப்படுத்தியவனாய்க் கடமையை யக்ஞமாகச் செய்பவனுடைய கர்மம் முழுவதும் கரைந்து போகிறது”

பகவத்கீதையின் ஐந்தாம் அத்தியாயமான ஸந்யாச யோகத்தின் 23ஆவது, 25ஆவது சுலோகங்கள் இவ்வாறு கூறுகின்றன.

இம்மையில் சரீரத்தை விடுவதற்கு முன்பு காமம், குரோதம் இவைகளிலிருந்து வேகத்தைப் பொறுக்கவல்லவனே யோகி; அவனே என்னை அடைவான்”.

“தீவினைகளைக் களைந்து, ஐயம் அகற்றி, இந்திரியங்களை அடக்கி எல்லா உயிர்களினது நன்மையில் மகிழ்வுறுவோர் பிரம்ம நிர்வாண நிலையை அடைகிறார்கள்”

பகவத்கீதையின் ஆறாம் அத்தியாயமான தியான யோகத்தின் ஒன்பதாவது சுலோகம் இவ்வாறு கூறுகிறது.

“நல்லெண்ணமுடையவர், நண்பர், பகைவர், உதாசீனர், மத்யஸ்தர், சத்புருஷர், பாபிகள் ஆகியவர்களிடத்து ஒரே மனமுடையவன் மேலோன்”

இதே அத்தியாயத்தின் 26ஆவது சுலோகம் இவ்வாறு கூறுகிறது.

“யோகத்தில் உறுதி பெற்று எங்கும் சமதிருஷ்டி உடையவன் தன்னை எல்லா உயிர்களிடத்தும், எல்லா உயிர்களைத் தன்னிடத்தும் இருப்பதாகக் காண்கிறான்”.

பகவத்கீதையின் எட்டாம் அதிகாரமான அகூரப்ரஹ்ம யோகத்தின் பதின்நான்காவது சுலோகம் இவ்வாறு கூறுகிறது.

“பார்த்தா, வேறு எண்ணமின்றி யார் என்னை இடையறாது ஸ்மரிக்கின்றானோ, அந்த ஒரு நிலைப்பட்ட யோகிக்கு நான் எளிதில் அகப்படுவேன்”

பகவத்கீதையின் பல சுலோகங்கள் முண்டக உபநிடதத்தைப் போலவே ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுகின்றன; “ஒழுக்கமுள்ளவன் எதையும் செய்வான், அவனிடம் நான் எளிதில் அகப்படுவேன்” என்று மஹா விஷ்ணு நேரடியாகக் கூறுகிறார். இதிலிருந்து இந்து தர்மம் ஒழுக்கத்தை உயிராகப் போற்றும் படி கூறுகிறதே தவிர மனிதனை உயர்ந்த சாதிக்காரன், தாழ்ந்த சாதிக்காரன் என்று கூறவில்லை.

இதைவிடப் பகவத்கீதையில் மஹா விஷ்ணு உலகில் வாழும் மனிதர்களை வர்ணபேதப்படி பிரிக்கவில்லை. குணபேதப்படியே பிரித்துள்ளார். அதைவிட யாகம்,

அபிஷேகம், பூசைகள் பற்றி விசேடமாக மஹாவிஷ்ணு கூறினாலும் அன்போடு தன்னைப் பிரார்த்திப்பவனின் பூசையையும் அவனது எளிய அன்பளிப்புக்களையும் மனமகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறேன் என்று ஒன்பதாவது அத்தியாயத்தின் இருபத்தாறாவது சுலோகத்தில் கூறுகிறார்.

“யார் எனக்கு இலை, மலர், கனி அல்லது நீரை பக்தியோடு படைக்கிறானோ, அத்தூய மனத்தானது அன்பளிப்பை நான் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கிறேன்”.

இவ்வாறு கூறியதிலிருந்து யாராக இருந்தாலென்ன ஒழுக்கமும் பக்தியுமுடையவனின் எளிய உணவுகளைக்கூட மஹாவிஷ்ணு ஏற்றுக்கொள்வார் என்பது புலனாகிறது.

மஹாவிஷ்ணுவுக்கு ஒரு நாள் விதுரர் கஞ்சியைக் கொடுத்தார். அதைப் பெருவிருப்புடன் ஏற்ற மஹாவிஷ்ணு மிகவும் சுவையாக உள்ளது என்று மகிழ்வுடன் கூறியபடி அதை உண்டார்.

குசேலர் கொண்டு சென்ற அவலை மிகவும் விருப்புடன் உண்டார்.

ஆண்டாள் தான் சூடிய பின் சூடிய மாலையை மஹாவிஷ்ணு பெருவிருப்புடன் ஏற்றுக்கொண்டார்.

விநாயகப் பெருமான் ஓர் அந்தணன் கொடுத்த காய்ந்த அறுகம்புல்லை உண்டு தனது பசியைத் தீர்த்துக்கொண்டார்.

சிவபெருமான், கண்ணப்பர் தான் ருசி பார்த்துவிட்டுக் கொடுத்த பன்றி இறைச்சியை உண்டு மகிழ்ந்தார்.

கடவுள், பக்தன் அன்போடு கொடுக்கும் எதையும் மகிழ்வுடன் வாங்கி உண்டதை நாம் புராணங்கள், இதிகாசங்கள் மூலம் அறிந்துள்ளோம்.

இதே அத்தியாயத்தின் இருபத்தேழாவது சுலோகத்தில் மஹாவிஷ்ணு கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

“குந்தியின் புதல்வனே, யார் எதைச் செய்தாலும், எதைப் புசித்தாலும், எதைக் ஹோமம் பண்ணினாலும், எதை ஐயமிட்டாலும், எத்தவத்தைப் புரிந்தாலும் அதை எனக்கு அர்ப்பணமாகச் செய்தல் வேண்டும்”.

கிரிஷ் சந்திரகோஷர் என்ற ஒருவர் இராமகிருஷ்ண பரமகம்சரிடம் வந்து போவது வழக்கம். அவர் அஞ்சாது பஞ்சமாபாதகங்களைச் செய்பவர். அவர் தினமும் இராமகிருஷ்ண பரமகம்சரை வந்து வணங்குவார். ஆனால் இராமகிருஷ்ண பரமகம்சர் ஒருபோதும், ‘தீய செயல்களைச் செய்யாதே’ என்று அவருக்குச் சொல்லவில்லை.

“நீ செய்யும் செயல்களை இறைவனுக்கு அர்ப்பணம் செய்” என்று மட்டும் கூறுவார்.

காலப்போக்கில் அவர் தனது தீய செயல்களைக் கைவிட்டுவிட்டார்.

இதை நாம் இராமகிருஷ்ண பரமகம்சரது உபதேசத்திலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

மனிதனை ஆட்டிப்படைக்கும் முக்குணங்களைப் பற்றி பகவத்கீதையின் பதின்நான்காவது அத்தியாயம் மிகவும் விபரமாகக் கூறுகிறது.

“பிரகிருதியிலிருந்து உண்டாகும் சத்துவம், ரஜஸம், தாமசம் என்னும் முக்குணங்கள் அழிவற்ற தேகியை தேகத்தில் பிணிக்கின்றன”.

“சத்துவம் அழுக்கின்மையால் ஒளி பொருந்தியது; துன்பப்படுத்தாதது; ஞானத்தாலும் கல்வியாலும் அது பிணிக்கப்பட்டது”.

“ராஜோகுணம் ஆசை வசப்பட்டது. அவாவையும் பற்றையும் உண்டுபண்ணுவது”

“தாமோ குணம் அக்ஞானத்தில் பிறந்தது. உயிர்கலெல்லாவற்றையும் மயக்குவது. அது அசட்டை, சோம்பல், உறக்கம் இவற்றைக் கொடுப்பது”.

“இந்த முக்குணங்களுக்குக் கட்டுப்பட்டவன் தான் மனிதன். இக் குணங்களுக்குக் கட்டுப்பட்டுத் தான் மனிதன் கருமமாற்றுகிறான்”.

வேதத்தில் கூறப்பட்ட நான்கு வர்ணத்தினரும் இம்முக் குணங்களுக்கு உட்பட்டவர்களே.

பகவத்கீதையின் பதினாறாம் அத்தியாயமான தெய்வாஸுர ஸம்பத்விபாக யோகத்தின் இருபத்துநான்கு சுலோகங்களும் குணங்களைப் பற்றிக் கூறுகின்றன.

“அஞ்சாமை, உளத்தூய்மை, ஞானத்திலும் யோகத்திலும் நிலைத்திருத்தல், ஈகை, பொறிகளை அடக்குதல், யாகம், சாஸ்திரம் படித்தல், தபசு, நேர்மை, தீங்கிழையாமை, உண்மை, சினமின்னை, துறவு, அமைதி, கோள் சொல்லாமை, இரக்கம், பிறர்பொருளை விரும்பாமை, ஞானம், இனிமை, மனம் சலியாமை, தைரியம், பொறை, மனவுறுதி, தூய்மை, வஞ்சகமின்மை, செருக்கின்மை போன்ற குணங்கள் தெய்வ சம்பத்துடன் பிறந்தவனுக்கு இயல்பாகவே இருக்கும்”.

“பகட்டும், இறுமாப்பும், தற்பெருமையும், சினமும், கடுமையும், அக்ஞானமும், அசுரசம்பத்துடன் பிறந்தவனிடம் இருக்கும்”.

“தெய்வீகம் என்றும், அசுரம் என்றும் இருவகை உயிர்ப் பிறப்புக்கள் உலகில் உண்டு”.

“செய்யத்தக்க நல்வினையையும், தகாத தீவினையையும் அசுர இயல்புடையவர்கள் அறியமாட்டார்கள். அவர்களிடம் தூய்மையும், நல்லொழுக்கமும், வாய்மையும் இல்லை”.

“இவர்கள் நெடுங்காமம் பிடித்தவர்களாய், பெருமையும், மதமும் பொருந்தியவர்களாய், மயக்கத்தால் கெட்ட எண்ணங்களைக் கிரகித்துத் தீய தீர்மானங்களுடன் தொழில் புரிகின்றனர்”.

“இவர்களுக்குச் சாகும் வரையும் துன்பங்களும் கவலைகளும் நீங்காது”.

பதினேளாவது அத்தியாயமான சிரத்தாத்ரயவியாக யோகத்தின் சுலோகங்கள் இவ்வாறு கூறுகின்றன.

“தேகிகளுக்கு இயல்பான சிரத்தையானது சாத்விகம் என்றும், ராஜஸமென்றும், தாமஸமென்றும் மூன்று விதமானது”.

“ஒவ்வொருவருடைய மனப்பாங்கிற்கேற்பச் சிரத்தை அமைகிறது. மனிதன் சிரத்தை மயமானவன்; சிரத்தை எதுவோ அதுவே அவனுமாம்”

“ஒவ்வொருவருக்கும் விருப்பமான உணவும் மூவகைப்படுகிறது. யாகமும், தபசும், தானமும் அங்ஙனமே அமைந்துள்ளன”.

“வினைப்பயனை விரும்பாதவர்களால் செய்யப்படும் கருமங்கள் சாத்விகமானது”

பயனை விரும்பியும், ஆடம்பரத்திற்காகவும் செய்யப்படும் கர்மங்கள் ராஜசமானது.

நெறி வழுவியதும், சிரத்தையற்றதுமான கர்மம் தாமஸமானது”

உலகில் உள்ள மனிதர்களை வேதம் நான்கு வர்ணங்களாகப் பிரித்தது போலப் பகவத்கீதை மூன்று குணங்களாகப் பிரித்துள்ளது.

வேதங்கள் நான்கு வர்ணத்தினரது குணம், இயல்பு, தொழில் ஆகியவற்றைக் கூறுவது போலக் கீதை மூன்று குணங்களையும் உடையவர்களது குணம், இயல்பு, தொழில் ஆகியவற்றைப் பற்றிக் கூறுகிறது.

வேதமும் கீதையும் சாதிகளைப் பற்றிக் கூறவில்லை. அதுபோலத் திருக்குறளும் சாதிகளைப் பற்றிக் கூறவில்லை.

இறைமாட்சி என்ற அதிகாரத்தில் வள்ளுவர் சத்திரியர்களைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்.

வீரமான படை, நன்மக்கள், நிறைத்த உணவு,சிறந்த அமைச்சர்கள், நல்ல நண்பர்கள், பாதுகாப்பு மிக்க அரண் ஆகிய ஆறு அங்கங்களையும் உடையவனே ஆண் சிங்கம் போன்ற அரசனாவான்

அஞ்சாமை,ஈகை, மிகுந்த அறிவு, ஊக்கமுடைமை என்ற நான்கும் குறைவுபடாதிருத்தலே சிறந்த அரசனின் பண்பாகும்.

அறம் தவறாமல், நீதியில்லாதவர்களை நீக்கி, வீரம் குறையாது,மானத்தைப் போற்றுபவனே, சிறந்த அரசனாவான்.

பழகுவதற்கு எளியவனாகவும், கடுஞ் சொற்களைப் பேசாதவனாகவும் இருந்து ஆளும் அரசனின் நாட்டை உலகம் புகழும்.

கொடை, கருணை, நீதி தவறாமை, குடிகளைக் காத்தல் ஆகிய நான்கு தன்மைகளையும் உடைய அரசன், அரசர்க் கெல்லாம் விளக்குப் போன்றவன்.

பெரியாரைத் துணைக்கோடல் என்ற அதிகாரத்தில் அரசன் எப்படியானவர்களின் துணையை நாடவேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

தக்க வழிமுறைகளை ஆராய்ந்து சொல்லும் அறிஞர்களே உலகின் கண்களாதலால், மன்னவன் அத்தகையவர்களை ஆராய்ந்து நட்புக் கொள்ளல் வேண்டும்.

தக்க பெரியாரைத் துணையாகக் கொண்டு வாழும் ஒருவனுக்கு, அவனது பகைவர்களால் ஒரு போதும் தீங்கு செய்ய முடியாது.

கண்டித்து அறிவுரை கூறவல்ல பெரியாரின் சொற்கேட்டு நடப்பவனைக் கெடுக்கவல்லவர்கள் எவரும் இல்லை.

முதல் இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் வருமானம் இல்லை. அதே போலத் தம்மைத் தாங்கிக் காப்பாற்றத் துணையில்லாதவனுக்கு நிலைத்த வாழ்வு இல்லை.

நல்லவர்களின் தொடர்பைக் கைவிடுதல், பலரது பகையைத் தேடிக் கொள்வதை விடப் பத்து மடங்கு தீமையைத் தரும்.

செங்கோண்மை பற்றி இவ்வாறு வள்ளுவர் கூறுகிறார்.

உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நம்பி வாழ்கின்றன. அது போல, குடிமக்கள் எல்லோரும் அரசனது செங்கோலை நம்பி வாழ்கின்றனர்.

அந்தணர் ஓதும் வேதத்திற்கும், அறத்திற்கும் மூலமாக நின்று உலகத்தைக் காப்பது மன்னனுடைய செங்கோலாகும்.

ஒருவனுக்கு வெற்றி பெற்றுத் தருவது வேல் அல்ல, மன்னனது நீதி தவறாத ஆட்சி முறையே ஆகும்.

இவ்வாறு சத்திரியர்களைப் பற்றிக் கூறும் வள்ளுவர் பிராமணர்களைப் பற்றியும், வணிகர்களைப் பற்றியும் சூத்திரர் களைப் பற்றியும் கூறுகிறார்.

எல்லா உயிர்கள் மீதும் பாகுபாடற்ற அன்பினைக் கொண்டவர்களே அந்தணர்கள் ஆவர்.

பார்ப்பான் தான் கற்ற மறைப்பொருளை மறந்தால் ஓதிக் கற்றுக்கொள்ள முடியும். ஆனால் அவன் தனது குடிக்குரிய ஒழுக்கத்தை மறந்தால், அக்குடி கெடும்.

வாணிகம் செய்வோன் வாணிகம் சிறப்படைய (இலாபம் அடைய) வேண்டுமானால், அவன் பிறரின் பொருளைத் தன் பொருளாகக் கருதுதல் வேண்டும்.

இற்பிறந்தார் கண் அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.

நடுவு நிலைமையும் நாணமும் உயர் குடியில் பிறந்தவரிடத்தில் அல்லாமல் மற்றவர்களிடத்தில் இயல்பாக ஒருசேர அமைவதில்லை.

உண்மையான உயர் குடியில் பிறந்தவர்களுக்கு முகமலர்ச்சி, கொடுத்து உதவும் தன்மை, இனிய சொல், பிறரை இகழ்ந்து கூறாமை ஆகிய நான்கு பண்புகளும் இயல்பாகவே இருக்கும்.

பல கோடி ரூபா மதிப்புள்ள பொருள்களைக் கொடுத்தாலும் உயர் குடியில் பிறந்தவர் தம் குடியின் சிறப்புக் குன்றுவதற்குக் காரணமான செயல்களைச் செய்யமாட்டார்கள்.

உயர்குடியில் பிறந்தவர்கள் செய்யும் குற்றம், வானத்து நிலவில் காணப்படும் களங்கம் போல, எல்லோருக்கும் நன்கு தெரியும்.

நிலம் எத்தன்மையது என்பதை அதில் முளைத்த முளை காட்டும் அது போல ஒருவனது வாய்ச் சொல் அவன் எக் குலத்தவன் என்பதைக் காட்டி விடும்.

ஒழுக்கமாக வாழ்பவன் தான் உயர்ந்த குடியில் பிறந்தவன். ஒழுக்கக்கேடாக வாழ்பவன் தாழ்ந்த குடியிற் பிறந்தவன்.

இதையே ஔவையாரும் கூறுகிறார். அத்துடன் பெரியவர், இழி குலத்தவரைப் பற்றியும் கூறுகிறார்.

“இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்” என்பது ஔவையாரின் வாக்கு.

தொழிலைக் கொண்டே அன்று சாதி பிரிக்கப்பட்டது.

சிவபெருமான் அடியவர்களுக்காகப் பல தொழில்களைச் செய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

சிவபெருமான் சுடலையைக் காப்பவர்.

இவர் விறகுவெட்டி விற்றவர்.

பிட்டைக் கூலியாகப் பெற்றுக்கொண்டு மண் சுமந்தவர்.

கடலில் மீன் பிடித்தவர்.

சுந்தரருக்குக் கல்யாணத் தரகராக் கடமை புரிந்தவர்.

நாயன்மார்களின் துன்பங்களை நீக்குவதற்காகப் பூத கணங்களைக் கொண்டு வேலை செய்வித்தவர்.

அடியாரான பாண்டிய மன்னனின் விருப்பத்திற்காகக் கால்மாறி நடனம் ஆடியவர்.

மார்க்கண்டேயருக்குத் துன்பம் ஏற்பட்ட போது யமனைக் காலால் உதைந்தவர்.

இவ்வாறு சிவபெருமான் பல வகையான தொழில்களைச் செய்த போதும் அவரை யாரும் இகழ்ந்ததில்லை.

'செய்யும் தொழில் தான் தெய்வம்' என்றதொரு முதுமொழி தமிழில் உண்டு. எத்தொழிலும் கேவலமானது அல்ல என்பதே இதன் பொருள்.

நாயன்மார்களில் பலர் பல தொழில்கள் செய்த போதும் இந்துக்கள் அவர்களைக் கேவலமாகக் கருதவில்லை.

கர்னன் தேரோட்டியின் மகன். துரியோதனன் அவனுக்கு முடிசூட்டி அரசனாக்கினான்.

குகன் இராமனின் உயிர் நண்பன். அவன் படகோட்டி.

தர்மவியாசன் என்ற கசாப்புக் கடைக்காரன் கௌசிகன் என்ற முனிவரின் குரு.

அரிச்சந்திரன் சுடலையைக் காத்தவன்.

பாண்டவர்கள் வேலைக்காரர்களாக இருந்தவர்கள்.

இவர்களை யாரும் இன்றுவரை கேவலமாக நினைத்ததில்லை.

வேதங்கள் சாதியமைப்பை ஏற்படுத்தவில்லை. ஆரம்பத்தில் அரசு இருக்கவில்லை. ஒவ்வொரு மனிதனும் தனது தேவைகளைப் பூர்த்தி செய்தான்.

பணம், பொருள் என்பன மனிதனிடம் சேர்ந்த பின்பு தான் உயர்வு, தாழ்வு என்ற பிரிவு உண்டானது.

பணம், பொருள் உள்ளவன் உயர்ந்தவன். அவை இல்லாதவன் தாழ்ந்தவன்.

இன்றும் அந்நிலை தான் காரணமாக இருக்கிறது. சாதி குறைந்தவன் என்று சமூகத்தால் தீர்மானிக்கப்பட்டவன் மேலதிகாரியாக இருந்தால் அவனின் கீழ், அவன் ஏவும் வேலைகளை உயர் சாதியினர் செய்தே ஆகவேண்டும்.

இன்று பல்வேறு சாதிகள் இருக்கின்றன. ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டால் கலப்புத் திருமணங்கள் பல நடந்துள்ளன. இதனால் அக்கிராமத்தில் உள்ளவர்கள் எல்லோரும் இனத்தவர்களாகிவிடுகின்றனர்.

எமது ஊரில் ஒரு சாதிமான் இருந்தார். அவர் பிற சாதி வீடுகளில் தண்ணீர் கூடக் குடிக்கமாட்டார். அவர் புலால் உண்பதில்லை.ஆனால் அவரது சகோதரியின் மகன் அவர்களது இனத்தவர் ஒருவரின் மகளைத் திருமணம் செய்தான். அந்த வீட்டுக்காரர் புலால் உண்பவர்கள். அதனால் அந்தச்சாதிமான் தனது சகோதரியின் வீட்டில் நடைபெறும் நன்மை தீமைகளுக்குச் செல்வதில்லை.

அந்தச் சாதிமானின் மகள் ஒரு சீவல்தொழிலாளியைக் காதலித்து அவனுடன் சென்றுவிட்டாள்.

ஒரு நாள் அந்தச்சாதிமானின் வீட்டிற்குக் கூலி வேலை செய்ய ஒருவன் வந்தான்.

சாதிமான் அவனுக்குச் சிரட்டையில் தேனீர் கொடுத்தார். அவன் சொன்னான்; “ஐயா, நீங்கள் பெரிய சாதிமான் என்று இப்பவும் நினைக்கிறீர்கள்... நீங்கள் ஒரு சீவல் தொழிலாளியின் மாமன். அதனால் நான் உங்களது வீட்டில் சாப்பிடமாட்டேன்” என்றான்.

தற்போதைய சூழ்நிலையில் சாதி, சமயம் பார்த்தால் எந்த வேலையை யாரும் செய்ய முடியாது.

வேத காலத்தில் நடைபெற்ற கலப்புத் திருமணங்கள், உறவு முறைகள் தான் தற்பொழுதுள்ள சமூகத்திலும் உள்ளன என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும். வேதகாலக் குடும்பங்களைப் போலவே தற்போதைய குடும்பங்களிலும் உள்ளவர்கள் பல்வேறுபட்ட தொழில்களைச் செய்கிறார்கள். இருந்தும் அக்குடும்பம் சாதியில் உயர்ந்தது, தாழ்ந்தது என்று சமூகத்தால் கணிக்கப்படுவது வேதனைக்கு உரியது.

ஒரு குடும்பத்தில் ஒருவன் வைத்தியனாகவும் இன்னொருவன் கூலிக்காரனாகவும் மற்றொருவன் விவசாயி ஆகவும் இருக்கிறான்.

இன்னொரு குடும்பத்தில் மூவரும் வைத்தியர்கள். முதற் குடும்பம் பிறப்பால் உயர்சாதியைக் கொண்டது. அடுத்த குடும்பம் பிறப்பால் தாழ்ந்த சாதியைக் கொண்டது. அதனால் மூன்று பேர் உயர்ந்த தொழில் செய்தும் அக்குடும்பம் தாழ்ந்த சாதியென்று கணிக்கப்படுகிறது.

அந்த மூன்று வைத்தியர்களின் தந்தை பொற்தொழிலாளி. தங்க ஆபரணங்கள் செய்பவர். அவர் ராசியானவர் என்று சமூகத்தவர் கணிப்பதால் திருமணத்திற்கு

முன்பு ‘பொன் உருக்கல்’ என்ற நிகழ்வில் அவர் தான் கலந்து செய்வார். அதிகமானவர்களுக்கு அவர் தான் தாலி செய்து கொடுப்பார்.

அவரின் அயல் வீட்டில் மிகவும் உயர்ந்த சாதியினர் தாம் என்று நினைக்கும் குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. அந்தக் குடும்பத்தில் மிகவும் அழகான பெண் ஒருத்தி இருந்தாள். அவளின் மீது தீவிரமான காதல் வைத்தியருக்கு இருந்தது. அதை அவர் தனது நண்பருக்குச் சொல்ல, அவர் அப்பெண்ணுக்குச் சொன்னார்.

அவள் சொன்னாள்; “அவர்கள் சாதியில் குறைந்தவர்கள். அவரைத் திருமணம் செய்தால் எனது சகோதரிகளைத் திருமணம் செய்ய யாரும் விரும்பமாட்டார்கள். அப்பா சிவபூசை செய்பவர். சமய அனுட்டானங்களைக் கடுமையாகக் கடைப்பிடிப்பவர். அதனால் நான் அவரைத் திருமணம் செய்ய முடியாது. அவன் தொட்டாலே நான் செத்துவிடுவேன்” என்று அகந்தையுடன் கூறினாள்.

வைத்தியரால் அதை மறக்க முடியவில்லை. பலகாலம் திருமணம் செய்யாது இருந்தார். பின் தந்தையின் வற்புறுத்தலுக்காகத் திருமணம் செய்தார். இருந்தும் அவரால் அவளை மறக்கமுடியவில்லை.

ஆண்டுகள் சில சென்றன. அவளுக்குத் திருமணமானது. வைத்தியர் மகப்பேற்றுத்துறையில் மேற்படிப்பைப் படிக்க வெளிநாடு சென்றுவிட்டார்.

சிலகாலம் மருத்துவப் படிப்புப் படித்து நிபுணத்துவம் பெற்ற அவர் திரும்பி வந்து தனியார் வைத்தியசாலை ஒன்றை ஆரம்பித்து நடத்தினார்.

அந்தப் பெண்ணுக்குத் திருமணமாகிவிட்டது. இருப்பினும் அவளுக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கவில்லை.

கடவுளை வேண்டினர். பல வருடங்களுக்குப் பின் குழந்தை ஒன்று கருவில் உருவாகியது. அது உருவான நாள் முதல் தாய்க்குப் பெரும் நோய் உண்டானது. எங்கும் வைத்தியம் செய்தும் நோய் குணமாகாததால் அவர்கள் வைத்தியரிடம் வந்தனர்.

வைத்தியர் அவளைப் பரிசோதிக்கும் அறைக்குள் அழைத்துச் சென்று பரிசோதித்துப் பார்த்தார். அவளது கர்ப்பப்பை பலவீனமடைந்திருந்தது. அதனால் அவளை சிலநாட்கள் அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெறுமாறு கூறினார். தினமும் அவர் அவளின் உடலைப் பரிசோதிப்பார். சிலமாதங்களின் பின் அறுவைச் சிகிச்சை செய்து குழந்தையை எடுத்தார். இப்பொழுது தாயும் பிள்ளையும் நலமாக இருக்கின்றார்கள். சாதியில் குறைந்த ஒருவன் உயர்சாதிப் பெண்ணைத் தினமும் பரிசோதனை செய்வதால் அவளது குடும்ப மானம் போகாதா…? இப்படி இன்று சமூகத்தில் எத்தனையோ சம்பவங்கள் நடைபெறுகின்றன.

எனக்குத் தெரிந்த ஓர் உயர்சாதிப்பெண் தாழ்ந்த சாதிக்காரனைக் காதலித்து அவனுடன் சென்றுவிட்டாள். ஆறு மாதங்களின் பின் பெற்றோர் அவளைப் பிடித்துவந்து அவளின் கர்ப்பத்தில் இந்தக் கருவை அழித்துவிட்டுப் பெரும் பணம், பொருள் கொடுத்து இன்னொருவனுக்குத் திருமணம் செய்து கொடுத்தனர்.

எனக்குத் தெரிந்த ஓர் ஆசிரியை பாடசாலையில் தயாரிக்கப்படும் தேனீரைக்கூட அருந்தமாட்டார். அவரின் மகள்

ஒரு தாழ்ந்த சாதிக்காரனைக் காதலித்து அவனுடன் சென்றுவிட்டாள். அதன் பின்பு எந்த ஓர் ஆசிரியரும் அவரின் வீட்டில் நடைபெறும் வைபவங்களுக்குச் செல்வதில்லை.

இன்னொரு பெண்ணின் கணவன் வியாபார நிமித்தம் வெளியூருக்குச் சென்று வருபவன். அவள் தனது வீட்டு வேலைக்காரனுடன் குடும்பம் நடத்துவதாக ஊரவர்கள் பேசிக்கொள்கிறார்கள்.

இதைவிட மோசமான சம்பவங்கள் பலவும் சமூகத்தில் நடைபெறுகின்றன. இவை நடைபெற்ற போதும் சம்பந்தப்பட்டவர்கள் தாம் தான் சமூகத்தில் உயர்ந்த சாதிக்காரர் என்று கூறிக்கொண்டு வாழ்கின்றார்கள்.

இவையெல்லாம் நடைபெறும் என்று தெரிந்து தான் இந்து மதம் சாதியை ஏற்படுத்தவில்லை. ஆனால் பிழைப்புக்காகச் சிலர் இவற்றை உண்டாக்கிப் பிழைக்கின்றார்கள்.

ஒழுக்கமுள்ளவனாக வாழவேண்டும். மனதால் கூட தீயவற்றை நினைக்காது வாழ்பவன் தான் கடவுளால் நேசிக்கப்படுபவன் என்று இந்து தத்துவநூல்கள் கூறுகின்றன.

பகவத்கீதையில் மஹாவிஷ்ணு தனது வாயால் உபதேசித்த 700 சுலோகங்களில் ஒன்று கூடச் சாதியைப் பற்றிக் கூறவில்லை.

வேதம் ஓதினால் அவன் பிராமணன்.

அரசியலில் உள்ளவன் சத்திரியன்.

வியாபாரம் செய்பவன் வைசிகன்.

இவர்களுக்குத் தொண்டு துரவு செய்பவன் சூத்திரன்.

கல்வியால், செல்வத்தால், வீரத்தால் இவை மாறுபடும். சூத்திரன் அரசியலில் ஈடுபட்டால் அவன் சத்திரியனாகி

விடுவான். அவன் கல்வியில் மேம்பட்டால் பிராமணன். வியாபாரத்தில் ஈடுபட்டால் அவன் வைசிகன்.

இவ்வாறு தான் வேதம் கூறுகிறது.

உபநிடதங்கள் மனச்சுத்தத்தோடு இறைவனை வணங்கினால் அவன் ஞானி என்கின்றன.

பகவத்கீதையின் பதினெட்டாவது அதிகாரமான மோஷஸந்யாச யோகத்தின் 24ஆவது, 26ஆவது சுலோகங்கள் இவ்வாறு கூறுகின்றன.

"பயனில் விருப்பம் வைக்காது, பற்றில்லாமல் விருப்பு வெறுப்பு அற்று எக்கருமம் செய்யப்படுகின்றதோ அது புனிதமானது".

"பற்று நீங்கியவன், அகங்காரமற்றவன், உறுதியும் ஊக்கமும் உடையவன், வெற்றி தோல்வியில் வேறுபடாதவன் இத்தகைய குணங்களை உடையோன் உயர்ந்தவன்".

இவ்வாறு மகாவிஷ்ணு கூறுகிறாரே தவிரப் பிராமணன் தான் உயர்ந்தவன் என்று கூறவில்லை.

பிராமணனாக இருந்தாலென்ன, வைசிகனாக இருந்தா லென்ன, சூத்திரனாக இருந்தாலென்ன, அவன் தைரியமான வனாக இருந்தால் அவனது குணத்தைக் கொண்டே அவனது குலம் கணிக்கப்படும்.

இதைப் பகவத்கீதையின் அதே அத்தியாயத்தில் உள்ள 27வது சுலோகம் விளக்குகிறது.

"ஆசையுள்ளவன், வினைப்பயனை விரும்புகின்றவன், உலுத்தன், துன்புறுத்தும் தன்மை உள்ளவன், சுத்தமில்லாதவன், மகிழ்வும் சோர்வும் உள்ளவன். இத்தகைய குணமுள்ளவன் தாழ்ந்தவன்.

இதைவிட மோசமானவன் யார் என்று 28 ஆவது சுலோகம் சொல்கிறது.

“யோகத்திற்கு ஒவ்வாத மனமுடையவன், அறிவு வளரப்பெறாதவன், முரடன், வஞ்சகன், பழிகாரன், சோம்பேறி, துயருறுவோன், காலம் நீடிப்பவன் இத்தகைய குணமுடையவன் மிகவும் மோசமான தாமஸ குணத்தான்” என்கிறார் மஹாவிஷ்ணு.

வள்ளுவர் உயர்ந்தவர்களைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்.

நல்வினை தீவினையின் பயன் அறிந்து துறவு பூண்டோரின் பெருமையே உலகில் உயர்ந்தது.

ஒருவன் மனத்தூய்மையுடன் வாழ்வதே அறமாகும். மற்றயனவெல்லாம் வெறும் ஆரவாரங்களாகும்.

அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், இரப்போர்க்கும் துணையாக இருப்பவன் இல்வாழ்வான்.

உலகில் இன்பமாக வாழ்கின்றவர்கள் அடையும் சிறப்பு, எல்லோரிடத்தும் அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று அறிஞர் கூறுவர்.

தன்னிடம் வந்த விருந்தினரைப் போற்றி உபசரித்து, இனிவரும் விருந்தினரைப் போற்றி உபசரிக்கக் காத்திருப்பவன் வானுலகத்தில் உள்ள தேவர்களுக்கு நல்ல விருந்தினனாவான்.

பணிவு உடையவனாகவும், இன்சொல் பேசுபவனாகவும் இருத்தலே ஒருவனுக்குச் சிறந்த அணிகலனாகும். மற்றய அணிகள் அணிகள் அல்ல.

ஒருவர் செய்த நன்றியை மறப்பது நன்றன்று. அவர் செய்த தீமையை அப்பொழுதே மறப்பது நன்று.

தன்னோடு தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் அவரோடு முறையோடு பொருந்தி நடத்தல் நடுவு நிலைமை என்று கூறப்படும். அது நன்மை பயக்கும்.

பணிவு உடையவர்களாக வாழுதல் எல்லோருக்கும் நன்மை தரும். அவர்களுள் செல்வந்தர்களுக்கு அது மற்றொரு பெரும் செல்வமாகும்.

குடும்பத்தின் உயர்வும் தாழ்வும் ஒழுக்கத்தில் தங்கியுள்ளது. ஒழுக்கமுடையவனாக வாழுதல் உயர்ந்த குடிமகனின் தன்மை. ஒழுக்கம் தவறி வாழ்தல் ஓர் இழிந்த குடிமகனின் தன்மை.

உலகத்தவரோடு இணைந்து நடக்கும் முறையைத் தெரிந்து கொள்ளாதவர்கள், பல்வேறு வகையான நூல்களைக் கற்றிருந்த போதிலும் அறிவில்லாதவர் ஆவர்.

அறத்தை விட்டுத் தீய வழியில் ஒழுகுவோர் எல்லோரிலும் பிறன்மனைவியை விரும்பி அவளுடைய வீட்டு வாயிலில் சென்று நிற்பவரைப் போல் அறிவிலிகள் இல்லை.

தீங்குகளைப் பிறர் தனக்குச் செய்தாலும், அதனால் அவர்களுக்கு வரும் துன்பத்திற்காக வருந்தி, அறம் அல்லாதவற்றை செய்யாமல் இருப்பதே நல்லவரின் இயல்பு.

தனக்கு அறமும் ஆக்கமும் வருவதை விரும்பாதவனே, பிறனுடைய ஆக்கத்தைக் கண்டு மகிழாமல் அதற்காகப் பொறாமைப்படுவான்.

நடுவு நிலைமை அல்லாதவற்றைக் கண்டு அஞ்சி ஒதுங்குகின்றவர்கள், பிறரின் பொருட்களைக் கவர்வதால் வரும் பயனை எண்ணி அப்பொருள் மீது விருப்பம் கொள்ளும் பழியான செயலைச் செய்யார்.

ஒருவன் அறத்தைப்பற்றிப் பேசாது அறமல்லாதவற்றைச் செய்தாலும், மற்றவனைப்பற்றிப் புறங்கூறாமல் இருக்கிறான் என்று சொல்லப்படுவது நன்று.

ஒருவன் பயனில்லாத பொருளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதைப்பற்றி விரிவாகச் சொல்லும் சொற்கள், அவன் அறமில்லாதவன் என்பதைத் தெரியப்படுத்தும்.

தமக்குத் தீமை செய்வோரையும் மன்னித்து, அவர்களுக்குத் தீய செயல்களைச் செய்யாதிருத்தலே மேலான அறிவாகும்.

உலக நடையை அறிந்து அதன்படி வாழ்பவனே உயிர் வாழ்பவனாகக் கருதப்படுவான். அப்படி வாழாதவன் செத்தவனாகவே கருதப்படுவான்.

வறியவர்களுக்குப் பொருட்களைக் கொடுப்பதே ஈகை. மற்றவர்களுக்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுப்பதாகும்.

தம்முடைய வாழ்க்கையில் பழி உண்டாகாமல் வாழ்கின்றவர்களே உயிர் வாழ்கின்றவர்; புகழ் உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழாதவர்.

பொருள் என்னும் செல்வம் இழிந்தவர்களிடம் கூட இருக்கிறது. உயர்ந்தவர்களிடம் உள்ள அருளாகிய செல்வமே மிகச் சிறந்த செல்வமாகும்.

நெய் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்வதை விட, ஓர் உயிரைக் கொன்று அதன் உடம்பைத் தின்னாமல் இருப்பது நல்லது.

தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதும், மற்றய உயிர்களுக்குத் துன்பங்கள் செய்யாதிருத்தலுமே தவத்தின் வடிவமாகும்.

ஒருவன் தன் மனம் அறிய உண்மை பேசி வாழ்ந்தானே யானால், அவன் தவத்தோடு தானமும் செய்வாரை விட உயர்ந்தவன்.

பலிக்கும் இடத்தில் சினம் வராமல் காப்பவனே சினம் காப்பவன் ஆவான். பலிக்காத இடத்தில் சினத்தைக் காத்தால் என்ன?. காக்காமல் விட்டால் என்ன?.

வாழ்கையில் ஏற்படும் துன்பங்களுக்கு அஞ்சி துறவறம் மேற் கொண்டவர்களை விட, இல்வாழ்க்கையில் இருந்து கொண்டு கொல்லாமையைக் கடைப்பிடிப்பவர்கள் உயர்ந்தவர்கள்.

ஒருவன் எந்தெந்தப் பொருள்களின் மீதிருந்த பற்றை நீக்கிக் கொள்கிறானோ, அவன் அந்தந்தப் பொருள்களால் துன்பம் அடைவதில்லை.

ஆசைகள் அனைத்தையும் துறந்தவர்களே உயர்ந்தவர்கள் ஆவர். அவ்வாறு துறக்காத மற்றவர்கள், அறியாமையாகிய வலையில் அகப்பட்டவராவர்.

எப்பொருள் எத்தன்மையதாய்த் தோன்றினாலும், அப்பொருளின் உண்மையான இயல்பை அறிந்து கொள்வதே மெய்மையான அறிவாகும்.

பற்றில்லாதவனாகிய இறைவனின் மீது மட்டும் பற்றுக் கொள்ளல் வேண்டும், உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கு அப்பற்றைப் பற்றுதல் வேண்டும்.

காமம், சினம், அறியாமை ஆகிய மூன்று பெருங் குற்றங்களையும் அடியோடு ஒழித்து விட்டால், துன்பங்கள் வராமல் கெடும்.

சிற்றினத் தோரைப் பெரியவர்கள் அஞ்சி ஒதுக்கி வைப்பார்கள். சிறியோர்கள் அவர்களைத் தமது சுற்றமாக எண்ணி அணைத்துக் கொள்வார்கள்.

திருக்குறள், நல்ல பண்புடையவர்களும், ஒழுக்க சீலர்களும், மனத்தைரியம் உள்ளவர்களும் தான் மேலானவர்கள் என்று கூறுகிறது.

கீழான மக்கள் எப்படியானவர்கள் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

பிறருக்கு உதவி செய்வதைக் கண்டு பொறாமைப் படுபவனது சுற்றம், உடையும் உணவும் இல்லாமல் கெடும்.

அருளை விரும்பி அறநெறிப்படி வாழ்பவன், பிறனுடைய பொருளை விரும்பிக் கொடிய தீமைகளைச் செய்ய நினைத்தால் கெட்டழிவான்.

கேட்பவர் எல்லோரும் கோபப்பட்டு வெறுக்கும்படி பயனில்லாத சொற்களைப் பேசுகிறவன் எல்லோராலும் இகழப்படுவான்.

தனது மனம் அறியக் குற்றம் செய்தவன் உயர்ந்த தவக் கோலத்தை உடையவனாக இருந்தாலும் அதனால் எந்தப் பயனும் வராது.

மனதில் உள்ள ஆசைகளைத் துறக்காமல், துறந்தவர்களைப் போல வஞ்சனைகள் செய்து வாழ்பவனைப் போன்ற கொடியவர்கள் வேறு எவரும் இல்லை.

உலகம் தீயவையெனப் பழிக்கும் செயல்களை விட்டு விட்டால், மொட்டை அடிக்கவும் வேண்டாம், சடை வளர்க்கவும் வேண்டாம்.

களவெடுத்து வாழ்பவர்களுக்கு உடம்புங் கூட உற்ற துணையாகாது. தவறிப் போகும். களவெடுக்காமல் வாழ்பவர்களுக்கு தேவர் உலகு தவறாது கிடைக்கும்.

ஒருவன் துன்பமானவை என்று தன்வாழ்க்கையில் கண்டு உணர்ந்த செயல்களை மற்றவர்களுக்குச் செய்யக் கூடாது.

பொருள் கொடாத தன்மையும், மாண்பில்லாத மானமும், தகுதியற்ற செயல்களால் கொள்ளும் மகிழ்ச்சியும் நாட்டை ஆள்பவர்களுக்குக் குற்றங்களாகும்.

தனது சுற்றத்தவர்களோடு தொடர்புகள் இல்லாதவரை நம்பி நடக்கக் கூடாது; அவர் உலகத்தில் பற்றில்லாத வராகையால் பழிக்கு அஞ்சமாட்டார்.

சான்றோர் புகழ்ந்து சொல்லிய செயல்களைப் போற்றிச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யாது இகழ்ந்தவர்களுக்கு ஏழு பிறவியிலும் நன்மை இல்லை.

முறையில்லாத செயல்களைச் செய்து குடிகளை வருத்துவதைத் தொழிலாகச் செய்யும் அரசன், கொலைத் தொழிலைச் செய்பவர்களை விடக் கொடியவன்.

அரசனது புகழை நிறுத்துவது அவனது நீதி தவறாத ஆட்சி முறையே ஆகும். அதிலிருந்து அவன் தவறினால் புகழ் இல்லாமல் போய் விடும்.

நல்ல குடியில்பிறந்தவ னென்றாலும் சோம்பலுக்கு ஆளானால் அ.்.து அவனை அவனுடைய பகைவர்களுக்கு அடிமையாகுமாறு செய்து விடும்.

ஒருவன் சொல்லாமலே அவனது குணத்தைப் பார்த்து அவன் என்ன நினைக்கிறான் என்பதை அறிந்து கொள்ள முடியாதவன் கீழானவன்.

தமக்குப் பயன் உள்ள போது நட்பாக இருப்பதும், பயனில்லாத போது நட்பிலிருந்து விலகிச் செல்வதும் கீழானவனின் பண்பாகும்.

செய்யும் செயல் வேறாகவும் சொல்கின்ற சொல் வேறாகவும் ஒன்றிற்கு ஒன்று தொடர்பில்லாமலும் நடப்பவன் கீழானவன்.

ஆற்றல் மிகுந்த பெரியவர்களைப் பகைப்பவன் கீழானவன்.

மனைவியை மிகவும் விரும்பி அவளுக்கு அடங்கி நடப்பது, தமது கடமைகளை மறந்து தனது மனைவியின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வது, அவசியமின்றி மனைவியிடம் தாழ்ந்து நடப்பது, மனைவிக்கு அஞ்சுவது போன்றன தாழ்ந்தவனின் இயல்பாகும்.

அன்பு காரணமாக விரும்பாமல் பொருள் காரணமாக விரும்பும் விலை மகளின் வீட்டில் தஞ்சமடைந்திருப்பவர்கள் கீழானவர்கள்.

கள் உண்பவர்கள் கீழானவர்கள்.

சூதாடுபவர்கள் கீழானவர்கள்.

தனது கடமைகள் எவையெவையென்று உணர்ந்து அதைச் செய்யாதவர்கள் கீழானவர்கள்.

உடம்பால் ஒத்திருப்பதால் எல்லோரும் உயர்ந்த மக்கள் என்று எண்ணக்கூடாது. நல்ல பண்புகளில்லாதவர் கீழ்மக்களாவார்.

மிகுந்த பொருளைச் சேர்ந்த பின்பும், அதை நல்ல செயல்களுக்குச் செலவு செய்யாதவர்கள் கீழ்மக்கள்.

சால்பு என்று சொல்லப்படுகின்ற நாணம் இல்லாத மக்கள் கீழ்மக்களாகவே கருதப்படுவார்கள்.

தனது குடும்பப் பெருமையை உயர்த்திப் புகழடையாதவர்கள் அனைவரும் கீழானவர்களே.

அறத்தோடு சேராத வறுமை வந்தபோது தன்குடும்பப் பெருமையை மறந்து நேர்மையீனமான வழியில் நடப்பவர்கள் கீழானவர்கள்.

பிச்சை கேட்கத்தக்கவர்களிடமும் இரந்து கேட்டு வாழ்பவர்கள் கீழானவர்கள்.

இவ்வாறு திருவள்ளுவர் உயர்ந்த மக்கள், தாழ்ந்த மக்கள் யார்யாரெனக் கூறுகிறார்.

இதைவிடத் திருமந்திரமும் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுகிறது.

''அந்தணராவோர் ஆறு தொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பிமுப்போதும் நியமஞ் செய்து
அந்தவ நற்கருமத்து நின் றாங்கிட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கறுப்போர்களே''

அந்தனர் என்போர் அறவோர். அறுதொழில் என்பது ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்டுவித்தல், ஈதல், ஈவித்தல் என்பனவாகும்.

''சத்தியம் இன்றித் தனிஞானம் தானின்றி
ஒத்தவிடையம் விட்டொரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரண் உண்மை யின்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றோ''

ஒழுக்கமின்றி, சிவசிந்தனையின்றி, சிவபெருமானின் திருவடியினை உணரும் உணர்வின்றி, பக்தியும் இன்றி, பரம்பொருளின் உண்மையான தன்மை பற்றிய அறிவுமின்றி

ஐம்புலன்களுக்கு அடிமைப்பட்டு ஒழுக்கமில்லாத வாழ்வை வாழும் பிராமணர்களைப் பிராமணர்கள் என்று கூறமுடியாது.

அரசனைப் பற்றித் திருமந்திரம் இவ்வாறு கூறுகிறது.

"கல்லா அரசனுங் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்" என்றும்,

"நாள் தோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாள்தோறும் நாடியவன் நெறி நாடானேல்
நாள் தோறும் நாடு கெடுமூட நண்ணுமால்
நாள்தோறும் செல்வம் நரபதி குன்றுமே" என்றும் கூறுகிறது.

சூத்திரர்களைப் பற்றி திருமந்திரம் இவ்வாறு கூறுகிறது.

"யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே"

திருமூலர் அந்தணர்க்குரிய ஒழுக்கத்தையும், அரசனுக்குரிய ஒழுக்கத்தையும், மற்றவர்களான வைசிகர், சூத்திரர்களுக்குரிய ஒழுக்கத்தையும் கூறியுள்ளாரே தவிரச் சாதி முறைகளைப் பற்றி எதுவும் கூறவில்லை.

பொதுவாகக் கற்றோர் பெரும்பாலும் தமது வாழ்விற்காகவே கற்கின்றனர். அவர்கள் இந்து தர்மங்களை எடுத்துக்கூறும் நூல்களைக் கற்பது குறைவு. கற்பவர்களில் பலர் அதன் உண்மையான தத்துவங்களை உணர்வதில்லை. உணர்ந்தவர்களும் தமது நன்மையைப் பற்றியே சிந்திக்கின்றனர். இதனால் இந்து தர்மம் கூறும் தத்துவங்களை அவர்கள் விளங்கிக் கொள்வதில்லை.

தற்போதுள்ள சமூக அமைப்பில் தொழில்கள் செய்வதற்கு ஆட்கள் தேவை.

துணி துவைக்க, இரும்பு வேலைகள் செய்ய, மரவேலை செய்ய, ஆபரணங்கள் செய்ய வேலையாட்கள் தேவை. இவ்வேலைகள் அவர்களின் தொழில்களே தவிரச் சாதியல்ல. தற்பொழுது மேற்கூறிய தொழில்களைப் பல சாதி மக்களும் செய்கிறார்கள்.

இந்து மதங்கள் கூறாத சாதிப் பிரச்சினையை இந்துக்கள் தலையில் தூக்கி வைத்துப் பேணுவது இந்து சமயங்களுக்குச் செய்யும் பெருந்துரோகமாகும்.

இறுதியாக வள்ளுவர் கூறியதை நினைவிற் கொள்வதற்காக அவற்றை இங்கு தருகிறேன்.

எல்லா உயிர்களுக்கும் பிறப்பு ஒரு தன்மையானதே ஆகும். வாழ்வில் உயர்வும் தாழ்வும் அவரவர்கள் செய்கின்ற தொழிலில் உள்ள வேறுபாடுகளைப் பொறுத்தே அமையும்.

மேல் நிலையில் இருந்தாலும் நல்ல பண்பில்லாதவர்கள் மேல் மக்களாக மாட்டார். கீழ் நிலையில் இருந்தாலும் இழிவான குணங்கள் இல்லாதவர் கீழ் மக்கள் ஆக மாட்டார்.

செய்ய முடியாத செயல்களையும் முறைஅறிந்து உரிய நெறியில் நின்று செய்து முடிக்க வல்லவரே பெருமையுடையவராவர்.

பெரியவர்களை விரும்பிப் போற்ற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம், அவருடைய சிறப்பை உணராத சிறியோரின் உள்ளத்தில் இல்லை.

இழிந்தவர்களிடம் செல்வமும் சிறப்புக்களும் சேர்ந்து விட்டால், அவர்கள் எல்லை மீறிச் செயற்படுவார்கள்.

பெருமையான பண்பாவது எக்காலத்திலும் பணிந்து வாழ்வதாகும், சிறுமையான பண்பானது தன்னைத் தானே வியந்து பாராட்டிக் கொள்வதாகும்.

பெருமைப் பண்பானது செருக்கு இல்லாமல் வாழ்வது; சிறுமைத் தன்மை கர்வங் கொண்டு அழிவது.

பிறருடைய குற்றங்களைப் பெரிது படுத்தாமல் மறைப்பது பெருமைக்குரிய பண்பாகும். அக் குற்றங்களைப் பெரிது படுத்திக் கூறுவது சிறுமைத் தனமாகும்.

இன்றியமையாத பல சிறப்புக்கள் வருவதாக இருந்தாலும் கூட, குடிப்பெருமையைக் கெடுக்கக் கூடிய செயலை ஒரு போதும் உயர்குடிப்பிறந்தோர் செய்யமாட்டார்கள்.

புகழோடு கூடிய ஆண்மையை விரும்புகின்றவர்கள், புகழ்தேடும் வழியிலும் குடிப்பெருமையைக் கெடுக்கக் கூடிய செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

உயர்ந்த ஒழுக்க நிலையில் இருந்து தாழ்ந்தவர்கள், தலையில் இருந்து விழுந்த மயிருக்குச் சமமானவர்கள்.

மலை போன்ற உயர்ந்த பெருமை உடையவரும், இழிவான செயலை ஒரு குன்றி மணியளவு செய்தாலும் மிகத் தாழ்ந்த நிலையை அடைவர்.

மதியாதவரின் பின்னே சென்று மானங் கெட்டு வாழ்வதை விட, அவ்வாறு செய்யாமல் நின்று அழிந்தான் என்று சொல்லப்படுதல் நன்று.

தமக்கு இழிவு நேர்ந்தால் உயிர் வாழாத மானம் உடையவரின் புகழை உலகத்தவர் தொழுது ஏந்தி வணங்குவர்.

தனது கடமைகள் இவையென உணர்ந்து நடக்கும் சான்றோர்கள் நல்லவை எல்லாவற்றையும் தமது இயல்பான கடமை என்று கொள்வார்கள்.

சான்றோரின் நலம் என்று கூறப்படுவது அவர்களது குணங்களின் சிறப்பே ஆகும். அது வேறு எந்த நலத்திலும் சேர்ந்தது அல்ல.

சான்றாண்மையை மதிப்பிடும் உரை கல் போல் செயற்படும் கருவி எது என்றால், தம்மை விடத் தாழ்ந்தவரிடத்திலும் தன் தோல்வியை ஏற்றுக் கொள்ளும் பண்பாகும்.

சான்றாண்மை என்னும் தன்மைக்குக் கடல் போன்றவர் எனப் புகழப்படுகின்றவர், உலகம் அழியும் ஊழிக்காலம் வந்தாலும், தன் நிலையில் இருந்து மாறமாட்டார்.

அன்புடையவராக இருத்தல், நல்ல குடியில் பிறத்தல் ஆகிய இரண்டும் பண்புடையவர்களாக வாழ்வதற்குச் சிறந்த வழிகள் ஆகும்.

உடம்பால் ஒத்திருப்பவர்கள் எல்லோரும் மக்கள் அல்லர், பொருந்தத்தக்க நல்ல பண்புகளால் ஒத்திருப்போரே மக்கள் ஆவர்.

மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர், அரம் போல கூர்மையான அறிவுடையவராக இருந்தாலும் அவர் மரத்திற்குச் சம்மானவர் ஆவர்.

பிறரோடு கலந்து பழகி மகிழ்ந்திருக்க முடியாதவர்களுக்கு, மிகப் பெரிய இந்த உலகம் பகற் காலத்திலும் இருளில் இருப்பதைப் போலவே இருக்கும்.

பண்பில்லாதவன் பெற்ற பெருஞ் செல்வம், அழுக்கடைந்த பாத்திரத்தில் வைக்கப்பட்ட பால் கெட்டுப் போனதைப் போன்றதாகும்.

இவ்வாறு திருவள்ளுவர் கூறுகிறார். இதுபோலவே இந்து சமய நூல்களும் கூறுகின்றன. அப்படியிருக்க இந்துக்கள் இப்பொழுதும் இந்து சமயங்கள் கூறாத நெறிமுறைகளையே கடைப்பிடித்து வருகிறார்கள். அதனால் தான் அவர்களால் முன்னேறமுடியவில்லை.

துன்பங்கள், துயரங்கள், சோதனைகள் யாவும் நல்லவர்களுக்கே சொந்தம்.

எனக்கு ஒரு நண்பர் இருந்தார். அவர் மிகமிக நல்லவர். நட்புக்கு இலக்கணமாக வாழ்பவர். வாழ்க்கையில் அடிக்கடி துன்பங்களையும், துயரங்களையும் சோதனைகளையும் சந்திப்பவர். அதனால் சிலசமயங்களில் வாழ்க்கையை வெறுத்தும் ஒதுக்குவார்.

மிகவும் உயர்ந்த குடியில் பிறந்தவர். அதனால் நடுவு நிலை தவறாதவர்; பாவத்திற்கு அஞ்சுபவர்; ஒழுக்கம், உண்மை, நாணயம் என்பவற்றிலிருந்து வழுவாமல் நல்ல வழியில் வாழ்பவர்.

எவ்வேளையிலும் முகமலர்ச்சியும், பிறருக்குக் கொடுத்துதவும் தன்மையும், இனிமையான சொற்களைப் பேசுவதும், பிறரை இழிவாக எண்ணாத தன்மையும் கொண்டவர்.

வறுமைப்பட்டவர். இருப்பினும் பிறருக்குக் கொடுத்து உதவும் உயர்ந்த குணத்தை ஒரு போதும் கைவிடாதவர்.

அத்துடன் பெருமை தராத செயல்களை மறந்தும் செய்யாதவர். அனைவரிடமும் பணிவுடன் நடந்துகொள்பவர்.

“சிறந்த முயற்சி, நிறைந்த அறிவு என்ற இரண்டையும் கொண்டு இடையறாது செய்கின்ற செயலால் ஒருவருடைய குடிப்பெருமை உயர்வடையும்” என்று நம்புபவர்.

நல்ல நூலின் நற்பொருளைக் கற்கக்கற்க மேலும் மேலும் இன்பம் தருவது போல, நற்பண்புகள் பலவும் உள்ள அவருடன் பழகுவது எனக்கு எல்லையில்லாத இன்பத்தைக் கொடுக்கும்.

“நட்பு என்பது ஒருவருக்கொருவர் சிரித்து மகிழ்வதற்காக ஏற்படுவதன்று. நண்பர்கள் நிலை தவறிச் செல்லும் போது அவரைக் கண்டித்து நல்லுரை கூறித் திருத்துவதற்காகவும் அமைந்தது” என்று கூறி நான் தவறுகள் செய்யும் போது அன்புடன் கண்டிப்பார்.

அவ்வேளைகளில் எனக்குச் சில சமயங்கள் கோபம் அளவுக்கதிகமாக வரும்.

நான் பதவியுயர்வு பெற்ற போது கடமை புரிந்த பாடசாலையின் ஆவணங்கள் சிலவற்றை நான் புதிதாகக் கடமையேற்றவரிடம் கையளித்தேன். அவரின் மீது இருந்த அளவற்ற நம்பிக்கை காரணமாகவே அவற்றை நான் அவரிடம் கொடுத்தேன். அப்பாடசாலைக்கு ஒரு புதிய கட்டிடம் கட்டக் கல்வித்திணைக்களம் தயாரான போது நான் ஆவணங்களைக் கையளித்த அந்த நபர் ‘உரிய ஆவணங்கள் தன்னிடம் ஒப்படைக்கப்படவில்லை’ என்றார். அதனால் பெரியதொரு கட்டடத்தொகுதி அப்பாடசாலைக்கு இல்லாமல் போய்விட்டது.

அதை நினைத்தால் இப்பொழுதும் எனது இருதயம் வெடித்துவிடும். அப்பாடசாலையின் மீது அதீத பற்றுக்கொண்ட எனது நண்பன் என்னைப் பொறுமையாக இருக்குமாறு கூறுவான். நான் ஆத்திரப்படும் வேளைகளில் அன்புடன் அரவணைப்பான்.

உயிருக்குயிராகப் பழகும் நண்பர்கள் உரிமையோடு கூறும் நல்வார்த்தைகளை இழிவானது என்று எண்ணாமல் ஏற்றுக்கொள்வது தான் சிறந்தது என்று நினைத்து நான் அவரது மனம் கோணாமல் நடந்துகொள்வேன்.

ஒரு நாள் அவர் சொன்னார்; 'ஒவ்வொருவரும் தத்தமக்குரிய கடமைகளைச் செய்யவேண்டுமே தவிர அக்கடமையின் பயன்களைப் பற்றி எண்ணுதல் கூடாது. நீ பேதைமை உள்ளவனைப் போலக் கெட்டவற்றைப் பிடித்து வைத்துக்கொண்டு நல்லவற்றை அலட்சியம் செய்கிறாய். நாணமில்லாதவர்களின் செயல்களை விமர்சிப்பது அறியாமையுள் எல்லாம் பெரும் அறியாமை என்பதை உணராமல் விமர்சிக்கிறாய்'' என்றார்.

நான் அவரை நிமிர்ந்து பார்த்தேன். எனக்குக் கோபம் கோபமாக வந்தது.

பாடசாலைக்குரிய காணியின் தன்மையைப் பற்றி எல்லாம் அறிந்தவர்கள், பாடசாலைக்காக என்னால் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு மைதானத்தில் அக்கட்டடத்தை அமைப்பதென்று தீர்மானித்து, அது பற்றிக் கல்வித் திணைக்களத்திற்கு அறிவித்திருந்தனர். எல்லாம் தெரிந்த எனது நண்பர் அதைக்கூறியது எனக்குக் கோபத்தை விட ஆச்சரியத்தைத் தான் வரவழைத்தது.

ஒருவாரகாலமாக நான் அவரின் வீட்டிற்குச் செல்லவில்லை. ஆனால் அவர் தினமும் வருவது போல வந்து போவார். ஒரு நாள் சொன்னார்; “எனக்கு அவசரமாகப் பத்தாயிரம் ரூபா தேவை”.

நான் “ஏன்? எதற்கு?” என்று கேட்காமல் அவர் கேட்ட தொகையைக் கொடுத்தேன்.

அன்று மாலை நான் கொடுத்த பணத்தைத் திருப்பிக்கொண்டு வந்து தந்தார். அப்பொழுதும் நான் அவரிடம் காரணங்கேட்டவில்லை. அவர் சொன்னார்; “பின்பு நடக்க இருக்கின்றவற்றை முன்னரே அறிந்து கொள்ளக்கூடியவர்கள் தான் அறிவுள்ளவர்கள். நீ அப்படியில்லாதவனாக இருக்கிறாய். ஒருவரை நம்புமுன் அதனால் வரும் நன்மை தீமைகளை ஆராய்ந்த பின்பே நம்பவேண்டும். ஒருவரை நுணுக்கமாக ஆராய்ந்து பாராது நம்பிக்கை வைப்பதைப் போலக் கேடு தருவது வேறு எதுவும் இல்லை. அந்த நம்பிக்கை இறுதியில் சாவுக்குச் சமமான துன்பத்தை உண்டாக்கும். ஒருவருடைய குணத்தையும், அவரது குடிப்பிறப்பையும், அவரிடம் உள்ள குறைகளையும், அவரைச் சேர்ந்தவர்களின் இயல்புகளையும் அறிந்த பின்பே நம்பிக்கை கொள்ளல் வேண்டும். நன்மைக்குரிய செயல்களை நீ செய்யும் போது கூடக் கண்டிக்கும் தன்மை உள்ளவரையும் ஆராய்ந்த பின்பு தான் நம்பிக்கை வைக்க வேண்டும். இவ்வளவும் தெரிந்த நீ நான் சொன்னவற்றை நம்பாது அவரையே நம்பினாய். அதனால் தான் இந்தத்துன்பம். அந்தத் துன்பம் உனக்கு மட்டும் சொந்தமானதல்ல. அதனால் நான் படும் வேதனையை நீ அறிவாயா…?” என்றார்.

நான் கலங்கிப் போனேன். அந்த நிகழ்வின் பின் எனக்கு யார் மீதும் நம்பிக்கை இல்லை.

‘‘துன்பங்களை ஒவ்வொருவரும் தாம் தாம் வரவழைத்துக் கொள்கிறார்கள். துன்பம் தானாகவராது. அது மனிதர்களுக்கு மிகமிக அருகிலேயே இருக்கும். மனிதன் தான் கூவி அழைத்து அதை வரவேற்றுத் தனது இதயத்துள் குடியிருக்க அனுமதிக்கிறான்’’.

‘‘நண்பா, துன்பங்கள், துயரங்கள், வேதனைகள் யாவும் மனிதர்கள் எல்லோருக்கும் வரும். ஆனால் நல்லவர்கள் இவற்றால் சோதிக்கப்படுகிறார்கள்’’.

‘‘துன்பங்கள் வந்தால் நன்மக்கள் அதை நீக்குவதற்காக தகாத வழியை நாடமாட்டார்கள். ஆனால் கீழ் மக்கள் தமக்கு வந்த துன்பம் நீங்கினால் போதும் என்று நினைத்து, அதை நீக்குவதற்கு எவ்வழியையும் பாவிப்பார்கள். நல்லவன் ஒருவன் வியாபாரத்தில் நட்டமடைந்தால் அவன் தனது நல்ல நண்பர்களிடத்தில் கடன் கேட்பான். இல்லாவிட்டால் வங்கியில் கடன் பெற நினைப்பான். ஆனால் தீயவன் ஒருவன் வியாபாரத்தில் நட்டமடைந்தால் தனது நண்பர்களுக்கு அதைத் தெரிவிக்காது தான் வியாபாரத்தைப் பெருக்கப் போவதாகக் கூறி நண்பர்கள், அறிந்தவர்கள், தெரிந்தவர்களிடம் கடன் பெற்றுக்கொண்டு தலைமறைவாகிவிடுவான்’’.

‘‘உனக்கு நடராசாவைப் பற்றித் தெரியும் தானே. அவன் பெரியதொரு வர்த்தக நிறுவனத்தை நடத்தி வந்தான். அது நட்டமடைந்த போது அவன் அதைப் பெருக்கப் போவதாகக் கூறிய போது ஊரில் உள்ளவர்கள் அவனுக்குப் பணம்

கொடுக்க முன்வந்தனர். வாங்கிய பணத்திற்குக் கூடுதலான வட்டியைக் குறித்த தினத்தில் அவன் கொடுத்தமையால் ஊரில் உள்ள பல தனவந்தர்கள் தாமாகவே முன்வந்து அவனுக்குப் பெருந்தொகையாகப் பணத்தைக் கொடுத்தனர். அவன் ஊரிலும், அயலிலும் உள்ள தனவந்தர்கள் பலரிடம் பணத்தை வாங்கிக் கொண்டு தலைமறைவாகிவிட்டான். இரண்டு வருடங்களுக்குப் பின்பு தான் அவன் வெளிநாட்டிற்குச் சென்றது கடன் காரர்களுக்குத் தெரியவந்தது. வியாபாரம் செய்தபோது பெற்ற இலாபத்தைவிடப் பல மடங்கு பணத்தை அவன் சுவிகரித்துவிட்டான். இப்படி நீ செய்வாயா..?'' என்று கேட்டார் எனது நண்பர்.

என்னால் அதற்குப் பதில் கூறமுடியவில்லை. அதனால் அவனே சொன்னான்; ''வாழ்க்கையில் வரும் இன்பங்கள், துன்பங்கள் யாவும் உயிர்கள் அனைத்திற்கும் பொதுவானவை. அவை வரும் போது மக்கள் மிகவும் அவதானமாகத் தமது வாழ்வை எதிர்கொள்ளல் வேண்டும். துன்பங்கள் ஒவ்வொருவரது செயல்களால் மட்டும் வருனவ அல்ல. ஊழ்வினைப் பயனாலும் வரும். ஒருவர் முற்பிறப்பில் அல்லது இப்பிறப்பில் செய்த செயல்களின் பயன்கள் அவ்வப்போது வந்தடையும். வரும் துன்பங்களையெல்லாம் மனவுறுதியோடு தாங்குவேன் என்று எண்ணி அதன் படி வாழ்பவனுக்குத் தெய்வம் வரிந்து கட்டிக்கொண்டு வந்து உதவி செய்யும். அதை விடுத்து வந்த துன்பத்தை எவ்வழியிலாவது நீக்க வேண்டும் என்று தீய வழிகளில் முயற்சிப்பவர்களை அறம் வருத்தும்''.

''ஒரு துன்பம் வந்தால் அடுத்தடுத்து ஆயிரம் துன்பங்கள் வரும். அவ்வேளைகளில் இறைநம்பிக்கையுடன்

உழைப்பவர்கள் துன்பங்களிலிருந்து விடுபடுவர். அதை விடுத்துத் தீய வழிகளால் தனது துன்பத்தைப் போக்க எண்ணுபவர்களின் குடிப்பெருமை அழிந்துவிடும். இப்பொழுது ஊரில் நடராசாவின் குடும்பம் இல்லை. இருப்பினும் ஊரவர்கள் எல்லோரும் நடராசாவின் குடும்பத்தைப் பற்றிக் கேவலமாகத் தானே கதைக்கிறார்கள்''.

''நடராசாவின் தகப்பன் போன கிழமை என்னைச் சந்தித்த போது மிகுந்த கவலையுடன் சொன்னார்; ''அவன் தீயவர்களுடன் சேர்ந்து தீயவழியில் சம்பாதித்த பொருட்கள் எல்லாம் அழிந்துவிட்டன. அதை அவன் மறைத்துக்கொண்டு நாடகமாடிப் பலரை ஏமாற்றிவிட்டு வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டான். அதனால் என்னால் ஊரில் வாழமுடியவில்லை. கடன் கொடுத்தவர்கள் நான் செல்லுமிடங்களில் என்னைப் பலரின் முன்னால் ஏசுகிறார்கள். என்னால் வெளியே தலை காட்ட முடியவில்லை'' என்று கவலைப்பட்டு அழுதார்.

''நண்பா, கீழ்மக்கள் ஒழுங்காக இருக்கிறார்கள் என்றால் அதற்குப் பல காரணங்கள் உண்டு. அச்சம் காரணமாக ஒழுங்காக இருப்பார்கள். அல்லது அவர்கள் விரும்பும் பொருளை அடைவதற்காக ஒழுங்காக வாழ்வது போல நடிப்பார்கள். அவர்கள் யாருக்காவது உதவுகிறார்கள் என்றால் அதற்குப் பல காரணங்கள் இருக்கும். இவர்களுக்குத் துன்பம் உண்டானால், அல்லது எதையாவது பெறநினைத்தால் தம்மைப் பிறருக்கு விற்றுவிடும் நிலைக்கும் அவர்கள் தயாராவார்கள். இதனால் தான் அவர்களுக்கு வந்த துன்பங்கள் இலகுவாக நீங்கிவிடுகின்றன''

“தீயவர்கள் தகாத செயல்களைச் செய்வதில் வெட்கப்படமாட்டார்கள்; இவர்கள் தக்க செயல்கள் எவையென ஆராயமாட்டார்கள்; யார் மீதும் அன்பு கொள்ள மாட்டார்கள்; காக்கவேண்டியவற்றைக் காக்க மாட்டார்கள்; தீமைகள் பலவற்றைச் செய்துகொண்டு நல்லவற்றைச் செய்யாது விட்டு விடுவார்கள். இப்படியானவர்களை நம்பியவர்கள் துன்பத்தில் இருந்து ஒருபோதும் விடுபடமாட்டார்கள்”.

“காட்டாற்று வெள்ளம் போலத் துன்பங்கள் பெருகி வந்தாலும் நல்லவர்கள் அத்துன்பத்தைப் போக்குவதற்காக உறுதியோடு உழைப்பார்கள். அவர்களது உறுதியையும் விடாமுயற்சியையும் கண்ட துன்பம் தானாக விலகிச் சென்று விடும்”.

“நண்பா, எனக்கு ஐந்து பிள்ளைகள். உழவுத்தொழிலை நான் செய்கிறேன். எனக்கு வருமானம் குறைவு என்பது உனக்குத் தெரியும். இருப்பினும் எனக்கு வரும் துன்பங்கள் யாவும் நீங்கித் தானே செல்கின்றன. எனது மூத்த மகன் மருத்துவக் கல்லூரியில் கற்கிறான். அடுத்த வருடம் அவன் மருத்துவராகிவிடுவான். அதன் பின் எனக்கு எந்தத் துன்பமும் வராது. துன்பப்படும் வேளைகளில் தீயவழிகளில் அத்துன்பத்தைப் போக்கினால் தான் துன்பங்கள் தொடர்ந்து வரும். எல்லாம் அறிந்த உனக்கு இது புரியவில்லையா..?”

“அன்பு காரணமாக விரும்பாமல் பொருள் காரணமாக விரும்பும் நண்பர்கள், இனத்தவர்கள், அயலவர்களால் தான் ஒருவருக்குத் துன்பங்கள் உண்டாகும். இந்தகைய கீழான மக்கள் கிடைக்கக் கூடிய பொருட்களின் அளவுக்கேற்பவே

அன்பு கொள்வார்கள். உண்மையான நட்புக் கொண்டவர்கள் ஒரு போதும் பிரிய மாட்டார்கள். அவர்கள் நண்பர்கள் உரிமையோடு செய்யும் செயல்களையும், சொல்லும் சொற்களையும் இழிவானது என்று எண்ணாமல் ஏற்றுக்கொள்வார்கள்'' என்று கூறிச் சில கணங்கள் பேசாதிருந்தார் எனது நண்பர்.

அவர் சொல்வதில் நியாயம் இருந்தது. அதனால் அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். நான் பதில் கூறாததால் அவர் சொன்னார்; "நண்பா, நீ கொண்ட நட்பில் ஏதோ குறையிருக்கிறது. நண்பர்கள் உரிமையோடு ஒரு செயலைச் செய்தால் அது தவறானாலும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். இது தான் நட்புக்கு இலக்கணம்'' அவன் கூறிக்கொண்டிருக்கும் போது நான் குறுக்கிட்டுச் சொன்னேன்; "சரி அதைவிடு. நான் தான் உன்னைத் தவறாக மதிப்பீடு செய்துவிட்டேன்'' என்றேன். அதன் பின் அவர் எதுவும் பேசவில்லை.

சத்தியசாய்பாபாவைச் சந்தித்த அவரது சீடர் ஒருவர் அவரிடம் ஒரு கேள்வி கேட்டார்.

"பகவானே, நல்ல குடும்பங்களில் கூடச் சாந்தியும் சமாதானமும் குறைந்துபோய்விட்டது. அதற்குக் காரணம் என்ன?''.

அதற்குப் பாபா சொன்னார்; "இவ்வுலகில் வேற்றுமைகள் இருப்பது போல ஒற்றுமையும் இருக்கத்தான் செய்கிறது. இந்தப் பூமி மேடு பள்ளங்களால் ஆனது. நமது சரீரம் கூட ஒரே சீராக இல்லை. ஐந்து விரல்கள் ஒன்றாக உள்ளதா? இருந்த போதிலும் இவ்வுடலில் ஓர் ஒத்துழைப்பை நாம்

அனுபவிக்கிறோம். அதே போல ஒரு குடும்பத்தில் எல்லோரும் ஒரே மாதிரியாக இருக்க மாட்டார்கள். அதனால் அவர்களுக்குள் சாந்தி, சமரசம் குறையக்கூடாது. இதற்கு ஓர் அருமையான உதாரணம், புராணத்தில் கூறப்படும் சிவசம்சாரத்தைப் பாருங்கள். சிவனது சிரத்தில் கங்கையும், அவனது நெற்றிக் கண்ணில் நெருப்பும் உள்ளது. இரண்டும் நேர் எதிரானவை. மேலும் சிவன் நாகாபரணன். அவனது கழுத்தில் பாம்பு உள்ளது. சிவகுமாரனான முருகனின் வாகனம் மயில். மயிலுக்குப் பாம்பு பகை. அன்னை பராசக்தியின் வாகனம் சிங்கம். இன்னொரு பிள்ளை விநாயகனின் முகமோ யானை. கனவில் கூட யானை சிங்கத்தை நினைக்காது. பார்வதி ஆபரண அணிகளுடன் அழகாகக் காட்சியளிக்கிறாள். சிவனோ வெறும் சாம்பலைப் பூசிக்கொள்கிறார். அந்த மஹா குடும்பத்தின் வீட்டில் தான் எவ்வளவு வேற்றுமைகள்? அத்தனை வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமை காணப்படுகின்றதல்லவா? குடும்பத்தில் எத்தனை வேற்றுமைகள் வேறுபட்ட கருத்துக்கள் இருந்த போதும் சிவகுடும்பம் போல சீராக ஒற்றுமையுடன் குடும்பங்கள் இயங்கவேண்டும்''.

துன்பங்கள், பிரச்சினைகள், வேற்றுமைகள் இல்லாத உயிர்கள் இல்லை. இவற்றைத் துன்பங்கள் என்றும், பிரச்சினைகள் என்றும் வேற்றுமைகள் என்றும் நினைப்பதால் தான் அவை நினைப்பவனைப் பற்றிப்பிடித்து ஆட்டுவிக்கின்றன.

``பெருமையாகப் பேசப்படுவனவெல்லாம், வறுமையால் துன்பப்படுபவர்களுக்குக் கொடுத்து உதவுகின்றவாரின் புகழைப் பற்றியே ஆகும்'' என்கிறார் வள்ளுவர்.

நல்லவர்கள் வறுமைப்பட்டால் மற்றவர்களிடம் உதவி கேட்கமாட்டார்கள். அதனால் அவர்களால் துன்பங்களிலிருந்து விடுபடுவது சிரமம். ஆனால் நல்லவர்களை இறைவன் சோதனை செய்வரே தவிரத் துன்பம் செய்யமாட்டார்கள். பல துன்பங்களை நல்லவர்களுக்குக் கொடுத்து அவர்களின் நல்ல குணங்களை உலகிற்குத் தெரியப்படுத்துவார்.

இந்த நிலை தான் அரிச்சந்திரனுக்கு வந்தது. நல்லவர்கள் எல்லாவற்றையும் இழந்தாலும் தன்னிலை இழக்க மாட்டார்கள். தன்நிலை இழக்காது வாழ்பவன் கட்டாயம் உயர்வான் என்பதை எமக்கு அரிச்சந்திரனது கதை புலப்படுத்துகிறது.

புராண இதிகாச நாயகர்களில் நல்லவர்கள் பலர் அனுபவித்த துன்பங்கள் யாவும் உலகத்திற்குத் தெரியும்.

சிற்றன்னையைத் தாயாக நினைத்து, அவளின் சொல்லை மந்திரமாக நினைத்ததால் தான் இராமன் காட்டுக்குச் சென்றான். அங்கு பல துன்பங்களைச் சந்தித்தான். அத்துன்பங்கள் யாவும் உலகத்தவர்களுக்கு இன்பத்தைக் கொடுத்தன.

கல்லாக இருந்த அகலிகை பெண்ணாக உருமாறினாள்.

சகோதரனின் மனைவியை வஞ்சித்துத் தனது மனைவியாக்கிக் கொண்ட வாலி வதை செய்யப்பட்டான்.

மக்களை அழித்த இராவணன் கொல்லப்பட்டான்.

பாரதக்கதையிலும் பாண்டவர்கள் தர்மத்தைப் பேணாது கௌரவர்களைப் போல நடந்திருந்தால் அவர்கள் பெரும் துன்பத்தை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிராது.

காய்த்த மரத்திற்குத் தான் கல்லெறி விழும். அந்த மரம் தன்னை வருத்தியவனைத் தண்டிக்காது. சுவையான பழத்தைக் கொடுக்கும்.

உலகில் வாழும் மக்கள் தமக்கு உதவும் மழைக்கு என்ன கைம்மாறு செய்கிறார்கள்?

வாழை மரம் தன்னை அழிப்பவனுக்கு வெகுமதியைக் கொடுக்கிறது.

நல்லவர்கள் தாம் பாடுபட்டுத் தேடிய பொருட்கள் அனைத்தையும் தேவையானவர்களுக்குக் கொடுத்து உதவுவர்.

உலக நடப்பை அறிந்து பிறருக்கு உதவிசெய்து வாழ்பவன் தான் உயிர் வாழ்பவன் ஆவான். மற்றவன் செத்தவனாகவே மதிக்கப்படுவான்.

பிறருக்கு மனமுவந்து உதவும் பெரும் அறிவினை உடையவனது செல்வம் ஊரில் உள்ளவர்கள் உண்பதற்கு ஏற்ற நீரை உடைய குளம் எந்நாளும் நிறைந்திருப்பதைப் போன்றதாகும். அதுபோலப் பயனை அதிகமாகத் தரும் நல்ல மரம் ஊரின் நடுவே பழுத்ததைப் போன்ற ஆகும்.

இவ்வாறு இந்து தர்ம நூல்கள் கூறுகின்றன.

நல்லவர் ஒருவரிடம் இன்னொருவர் உதவி கோரிச் செல்கிறார். அப்பொழுது அந்த நல்லவரிடம் மற்றவர் கோரிய பொருள் இல்லை. அதனால் அவர் துன்பப்படுகிறார். இப்படியான துன்பமும் நல்லவர்களுக்கு மட்டும் தான் வரும்.

கொடுத்துதவாத தன்மை உள்ள ஒருவரிடம் இன்னொருவர் ஒரு பொருளைக் கேட்கச் சொல்கிறார். அவர் பத்து முறை தனது குலதெய்வத்தினைச் சாட்சியாக வைத்துத் தன்னிடம் அப்பொருள் இல்லை என்கிறார். அதன் பின் தனது மனைவியிடம் தான் அப்பொருளைக் கொடுக்காது

விட்டமைக்குக் காரணத்தைச் சொல்லிப் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்கிறார்.

எனது நண்பர் ஒருவர் மிகவும் வறியவர். அதனால் நான் என்னால் முடிந்த உதவிகள் அனைத்தையும் செய்வேன். அதற்குப் பிரதியுபகாரமாக அவர் தன்னிடமுள்ள பொருள்களைக் கொண்டுவந்து தருவார். அவர் ஒரு விவசாயி. அதனால் தினமும் காய்கறி வகைகளைக் கொண்டு வந்து தருவார். அதற்கு பணம் வாங்கமாட்டார். அவர் எதையும் யாரிடமும் கேட்கமாட்டார். அவரின் தேவையை அறிந்து பிறர் தான் உதவி செய்தல் வேண்டும்.

“உதவி என்பது மற்றவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்வது மாத்திரமன்று. மனம், மெய், மொழி ஆகியவை சமநிலைப்பட்ட பின்பு செய்வதே உண்மையான உதவி” என்று நான் அவருக்கு உதவி செய்த போது புரிந்துகொண்டேன்.

அவர் சொன்னார்; “நண்பரே, நான் ஏழை. எனினும் தன் நம்பிக்கை மிக்கவன். உண்மையான நண்பர்கள் ஒரு சிலர் மட்டும் தான். அவர்களைக் கூட நம்பி வாழக்கூடாதென்று நான் நினைக்கிறேன். சில சமயங்களில் நண்பர்களின் தயவு இல்லாமற் போகும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் என்னால் வாழ இயலாது போய்விடும்”

நேர்மையாகவும் ஒழுக்கமாகவும் வாழவேண்டும் என்று நினைத்து உறுதியாக இருந்து, அதிலிருந்து எக்காரணம் கொண்டும் வழுவாது வாழ்வோர் அடிக்கடி துன்பங்களையும், வேதனைகளையும் சந்திப்பதை நான் கண்டிருக்கிறேன்.

எனக்கு உயர் அதிகாரி ஒருவர் நண்பராக இருந்தார். அவர் உயர் அதிகாரியாக இருந்ததால் யாருடனும்

கலகலப்பாகப் பழகமாட்டார். அதிகமானவர்களுடன் அவர் கதைப்பதில்லை. ஆனால் என்னுடன் மனம் விட்டுப் பழகுவார். அவர் ஒரு நாள் எனக்குச் சொன்னார்; ‘‘நண்பா, உயர் அதிகாரியாக இருப்பதால் என்னால் யாருடனும் மகிழ்வாகப் பழகமுடியவில்லை. யாருடனாவது சந்தர்ப்பம் ஏற்படும் போது கூட மகிழ்வாகக் கதைத்தால் அவர்கள் பல உதவிகளைக் கேட்கிறார்கள். நான் உயர் அதிகாரி. பல வேலைத்திட்டங்கள் எனது பொறுப்பில் உள்ளன. பலருக்கு வேலைகள் கொடுக்க விண்ணப்பங்கள் கோரல் வேண்டும். சென்ற வாரம் ஒரு பெரிய வேலைக்கு விலைக்கூறு கோரினேன். பல இலட்சம் ரூபா பெறுமதியான அவ்வேலைக்குப் பலர் விலைக்கூறு மனு அனுப்பியிருந்தனர். இரகசியமாக அனுப்பப்பட்ட அந்த விலைக்கூறு மனுக்களை அந்தரங்கமாக வைத்திருந்தேன். எனது தங்கையின் கணவர் வீட்டுக்கு வந்து தனது நண்பர் ஒருவருக்கு அந்த வேலையைக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். விலைமனுக் கோரியவர் எனது மைத்துனரின் மேலதிகாரி. அதை நான் செய்து கொடுத்தால் மைத்துனருக்குப் பதவியுயர்வு தருவதாக அவர் எனது மைத்துனருக்கு ஆசைகாட்டியிருந்தார். அதனால் மைத்துனரும் தங்கையும் மாறி மாறி வீட்டுக்கு வந்து சென்றனர்’’.

‘‘விலைக்கூறு விண்ணப்பத்தை நானும் சில உயர் அதிகாரிகளும் பிரித்துப் பார்த்தோம். எனது மைத்துனரின் மேலதிகாரி விலையைக் குறைவாகக் கேட்டிருந்தார். அதனால் இன்னொருவருக்கு அவ்வேலையைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டானது. அதை நான் விளக்கமாகக் கூறியும் எனது தங்கையும் மைத்துனரும் கேட்கவில்லை. அன்றிலிருந்து

அவர்கள் எனது வீட்டில் நடைபெறும் நன்மை தீமைகளுக்குக் கூட வருவதில்லை. எனது தந்தையார் என்னுடன் தான் இருந்தவர். அவர் மரணமானபோது கூட அவர்கள் வரவில்லை. அதைவிட வேலை கொடுத்தவர் அடிக்கடி வேலை விடயமாக என்னைச் சந்திப்பார். அதனால் அவர் எனக்கு இலஞ்சம் கொடுத்துத் தான் வேலையைப் பெற்றார் என்று அலுவலகத்தில் கதைக்கிறார்கள்''

மிகுந்த கவலைகொண்ட அவர் கண்ணீர் விட்டு அழுதார்.

''நான் வகிக்கும் பதவியில் முன்பிருந்தோர் இலட்சம் இலட்சமாகச் சம்பாதித்தனர். ஒரு வேலையைக் கொடுப்பதற்குப் பல இலட்சம் ரூபாவை இலஞ்சமாகப் பெறலாம். ஆனால் அது எனக்கு விருப்பமில்லை. இலஞ்சம் வாங்கினால் வாழ்நாள் முழுவதும் கலங்கிக் கொண்டே இருத்தல் வேண்டும். எனது திணைக்களத்தைச் சேர்ந்த மேலதிகாரிகள் நான் மிகவும் நேர்மையானவன் என்று நினைத்திருக்கிறார்கள். அதைக் கெடுக்க நான் விரும்பவில்லை'' என்றார்.

நேர்மையாகவும், ஒழுக்கமாகவும் வாழும் அவரை ஊரவர் மதிப்பதில்லை. ''மனிதன் உதவி செய்து வாழவேண்டும். அவர் வகிக்கும் பதவியை வைத்துக்கொண்டு எவ்வளவு உதவிகளைக் கிராமத்திற்கும், மக்களிற்கும் செய்யலாம்'' என்று பலர் என்னுடன் கதைத்துள்ளனர்.

நேர்மையுடன் வாழும் அவர் மிகவும் துன்பத்துடன் தான் தொழிலாற்றினார். அவர் ஓய்வு பெற்ற பின்பும் ஊரவரோ இனத்தவரோ அவரின் வீட்டிற்குச் செல்வதில்லை.

அவரால் எனக்குப் பல துன்பங்கள் வருவதுண்டு. அவர் ஓய்வான நேரங்களிலெல்லாம் எனது வீட்டிற்கு வந்துவிடுவார். என்னையும் தனது வீட்டிற்கு வருமாறு வற்புறுத்திச் சொல்வார். அவரது மகளுக்குத் திருமணம் நடைபெற்ற போது நான் தான் முன்னின்று சகல வேலைகளையும் செய்தேன். இதுவும் எனக்குச் சோதனையை உண்டாக்கியது.

எனது தங்கையின் மகன் ஒரு வேலைக்கு விண்ணப்பித்தான். அது எனது நண்பரால் கோரப்பட்ட வேலை.

அந்த வேலைக்கு விண்ணப்பத்தை அனுப்பிய தங்கையின் மகன் விண்ணப்பபபடிவப் பிரதியுடன் தங்கையையும் அழைத்துக்கொண்டு அன்றே வீட்டிற்கு வந்தான். அவர்கள் வரும்போது எனது நண்பரான உயர் அதிகாரி வீட்டில் இருந்தார்.

அவர் சென்றதும் எனது தங்கை சொன்னாள்; ‘‘அண்ணா, தம்பி கணக்காளர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளான். அதன் மேலாளர் உங்களது நண்பர் சிவஞானம் தான். அவர் உங்களோடு மட்டும் தான் நட்புப் பூண்டவர். நீங்கள் சொன்னால் அவர் கேட்பார். விண்ணப்பப்பத்திரத்தின் பிரதி இது’’ என்று ஒரு கடித உறையை நீட்டினாள். என்னால் உடனே அதை வாங்கமுடியவில்லை. இது பற்றி நான் அவருடன் கதைத்தால் அவர் எனது வீட்டிற்கு வரமாட்டார் என்பது எனக்குத் தெரியும்.

‘‘நான் உங்களை நம்பியிருக்கிறன்’’ என்று கூறிவிட்டு அவன் சென்றுவிட்டான்.

ஒருவாரம் கழிந்த பின்பு அப்பதவிக்கான நேர்முகப் பரீட்சை நடந்தது. நேர்முகப் பரீட்சைக்கு முதல் நாள் எனது

தங்கை வீட்டுக்கு வந்து தனது மகனின் வேலை விஷயத்தை ஞாபகப்படுத்தி விட்டுச் சென்றாள்.

அன்று மாலை நான் அவரின் வீட்டிற்குச் சென்று பலமணி நேரம் அவருடன் உரையாடினேன். சமயம், இலக்கியம், அரசியல் என்பவற்றை அவர் கதைத்தார். அலுவலக விஷயங்கள் எதுவும் அவர் கதைக்கமாட்டார். அவரது மனைவி கூட அலுவலகம் சம்பந்தமான கதைகளைக் கதைக்கமாட்டாள். அவரில்லாத நேரங்களில் அவள் மிகுந்த மனவருத்தத்துடன் எனக்குப் பல கதைகள் சொல்வாள்.

இரவானதும் அவரிடமிருந்து விடை பெற்றேன். நேர்மையாக நான் வாழ்வதால் தான் என்னுடன் தான் பழகுவதாக அவர் அடிக்கடி கூறுவார். அவரது நம்பிக்கையைக் கெடுக்க நான் விரும்பவில்லை. நானும் நேர்மையாக வாழ்ந்து பழகியமையால் எனக்கு நேர்மையில்லாதவற்றைக் கேட்க மனம் வரவில்லை.

நேர்முகப் பரீட்சை நடந்து முடிந்தது. மறுநாள் எனது தங்கை வந்து; “கதைத்தீர்களா..?” என்று கேட்டாள்.

எனக்குத் தர்மசங்கடமாகிவிட்டது; “அவரைப் பற்றி உனக்கு மட்டுமல்ல ஊருக்கே தெரியும். அவர் தனது இனத்தவர்களுக்குக் கூட உதவி செய்வதில்லை” என்றேன்.

சில நிமிடங்கள் அவள் கலங்கியபடி நின்றாள். அவளைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது.

“உண்மைதான் அண்ணை. அவரது தங்கைக்கே அவர் உதவி செய்யவில்லை. அவரது தங்கை அவரை மிகவும் கேவலமாக ஏசுவாள். இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களா என்று நான் எண்ணுவதுண்டு. கூடப்பிறந்த சகோதரிக்கு

உதவாத பதவி உவருக்கு ஏன்?'' என்று கேட்டுவிட்டுச் சென்றாள்.

ஒரு வாரம் கழிந்தது. அன்று அவள் மிகுந்த சந்தோசத்துடன் வீட்டுக்கு வந்தாள். ''அண்ணை, அவர் மிகவும் நல்லவர். பாகுபாடு காட்டாதவர். நேர்மையான வழியில் நடப்பவர். இல்லாவிட்டால் எனது மகனுக்கு வேலை கிடைத்திராது. தகுதியை மட்டும் பார்த்தபடியால் தான் எனக்கு வேலை கிடைத்தது. தகுதியைப் பாராது அவர் இலஞ்சம் பெற்றிருந்தால் எனக்கு இவ்வேலை கிடைத்திராது. அவரது மருமகளும் இவ்வேலைக்கு விண்ணப்பித்திருந்தாள். அதைவிடப் பல பிரமுகர்களின் பிள்ளைகள் விண்ணப்பித்திருந்தனர். தகுதி ஒன்றை மட்டும் பார்த்ததால் தான் எனக்கு இந்த வேலை கிடைத்தது'' என்று மகன் கூறினான். அந்த மனிசன் நேர்மையாகக் காலம் முழுவதும் பணி செய்ய வேண்டும். அதற்கு நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி அவருக்கு நிறைந்த வாழ்வைக் கொடுக்க வேண்டும்'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

அன்று இரவு நான் அவரது வீட்டிற்குச் செல்லவில்லை. மறுநாள் சனிக்கிழமை. அவர் எனது வீட்டிற்கு வந்தார். இருவரும் புறப்பட்டு நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்குச் சென்றோம். அங்கு பலர் கூடி நின்றனர். பலமணி நேரம் நாம் இருவரும் அங்கு நின்றோம். அவருடன் நான் இருக்கும் வேளைகளில் எனது நண்பர்கள் கூட எனக்கு அருகே வரமாட்டார்கள்.

அவர் வழமை போலப் பலவற்றைக் கதைத்தார். எனது தங்கையும் மகனும் கோயிலுக்கு வந்தனர். அப்போது கூட

அவர் அதைப்பற்றிக் கதைக்கவில்லை. நானும் அதுபற்றி அவருடன் கதைக்கவில்லை.

சிறிது நேரத்தில் அவர் சென்று விட்டார். கோயிலடியில் நின்ற எனது நண்பர்கள் எனக்கருகே வந்தனர்.

எனது நண்பனான அருளாளன் விகடமாக எவ்வேளையிலும் கதைப்பான்; ''சிவஞானத்தாருடன் எப்படிக் கதைக்கிறாய்? ஐந்து நிமிடம் கதைத்தால் தட்டிப்போடும்'' என்றான்.

நான் வீட்டிற்கு வந்தேன். மனைவி சொன்னாள்; சிவஞானம் ஐயா உங்களுக்காகத்தான் உங்களது தங்கையின் மகனுக்குப் பெரியதொரு உத்தியோகத்தைக் கொடுத்தவராம். அவரை இங்கு வரவேண்டாம் என்று சொல்லுங்கோ. அதனால் குடும்பமானம் போய்விடும்'' மனைவியின் கதை என்னைப் பலவழிகளில் சிந்திக்க வைத்தது. எனக்கு வயது மகள் ஒருத்தி இருக்கிறாள். என்னுடன் எனது தங்கை ஒருத்தி இருக்கிறாள். இவர்களின் வாழ்க்கை சில சமயம் பாதிக்கப்படலாம். இதை எவ்வாறு அவருக்குச் சொல்வது. அதன் பின் எனக்கு நிம்மதியில்லை. அதனால் அவரைச் சந்திப்பதைத் தவிர்த்து வந்தேன். எனது வாழ்நாளில் இப்படியான ஒரு துன்பத்தை நான் சந்திக்கவில்லை.

ஒருவரோடு நட்புக் கொள்ளும் போது அவரை ஒரு நாள் பிரியவேண்டிய நிலையேற்படும் என்று நினைத்த பின் நட்புக்கொண்டால் பிரியும் போது உண்டாகும் துயரம் குறையும். ஆனால் அவரோடு பழகும் போது என்னால் அப்படி நினைக்க முடியவில்லை.

அந்த மேலதிகாரியின் தங்கை தான் இவற்றிற்கெல்லாம் காரணம். அவள் தனக்காகத் தனது கணவனின் மேலதிகாரிக்கு வேலை செய்வதற்கான அனுமதியைக் கொடுக்காது, எனக்காக எனது தங்கையின் மகனுக்கு உயர்பதவி வழங்கியுள்ளார் என்று ஊரில் தினமும் கூறிவருகிறாள். இது எனது நண்பரான மேலதிகாரிக்குத் தெரியவந்துவிட்டது. ஒருநாள் என்னைச் சந்தித்த போது கூறினார்.

“மனிதர்கள் எப்பொழுதும் தமது கருமங்கள் முடியும் வரை தான் தம்மைத் தாழ்த்தி, தாம் கருமம் பெற நினைப்பவர்களை உயர்த்திப் போற்றுவார்கள். கருமம் முடிந்ததும் அவர்கள் பெரியவர்களாகி விடுவார்கள். அப்பொழுது செயல்களைச் செய்து கொடுத்தவர்களுக்குத் துன்பம் தான் உண்டாகும்”.

அவர் கூறிய கருத்துக்கள் எனக்கு விளங்கவில்லை. அவர் நீதிக்குப் பிறம்பான செயல்களில் எப்போதும் ஈடுபடுவதில்லை. அப்படி இருக்க; இப்படி ஏன் சொல்கிறார்? என நினைத்தேன்.

அவரே தொடர்ந்து சொன்னார்; “பெண்கள், இரக்கம், அன்பு, தயவு, தாட்சன்யம் உள்ளவர்களாக இருந்தாலும் நம்பக் கூடாது. அவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாகவும், நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். ஏனென்றால் இரக்கம், அன்பு, தயவு, தாட்சன்யம் யாவும் தாசிகளிடமும் உண்டு”.

என்றுமில்லாதவாறு இன்று ஏன் இவ்வாறு கூறுகிறார் என்று நான் நினைத்தேன். ஆத்மீகம் சம்பந்தமான நூல்கள் பலவற்றை அவர் கற்றுள்ளார். அதனால் அவர் பல வாழ்க்கைத் தத்துவங்களைச் சொல்வார். அவற்றைக் கேட்பதற்காகத்தான்

நான் அவரைச் சந்திப்பேன். ஆனால் இன்று அவர் கூறியது எனக்குப் புரியவில்லை.

“ஒருவன் நல்ல முறையில் வாழ்வேண்டுமானால் அவனுடன் தொடர்புள்ளவர்கள் அனைவரும் நல்லவர்களாக, வல்லவர்களாக, ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்”.

“நான் ஒழுக்கமுள்ள தாயைப் பெற்றேன்”.

“கண்டித்துத் திருத்தும் தந்தையைப் பெற்றேன்”.

“மனதைப் புரிந்து நடக்கும் மனைவியைப் பெற்றேன்”.

“தன்நலம் கருதாத நண்பர்கள் சிலரைப் பெற்றேன்”.

“நேர்மையான அதிகாரிகள் சிலரைப் பெற்றேன்”

“நல்லமக்களைப் பெற்றேன்”.

“இவற்றால் தான் நான் உயர்ந்த பதவியைப் பெற்றேன்”

“என் வாழ்நாள் முழுவதும் இப்படியே வாழ எனது குலதெய்வம் உதவவேண்டும்” என்றார்.

இவற்றையெல்லாம் ஏன் சொல்கிறார் என்று எனக்குப் புரியவில்லை. ஆனால் அன்றிலிருந்து அவர் எனது வீட்டிற்கு வருவதில்லை. நானும் அவரது வீட்டிற்குச் செல்வதைப் படிப்படியாகக் குறைத்து வந்தேன்.

வாரத்தில் இரண்டு மூன்று முறை கோயிலில் சந்திப்பேன். அவர் எந்தவித மாறுபாடுகளும் இல்லாமல் முன்பு போலவே பேசுவார்.

இத்தகையதொரு துன்பம் தீயவர் ஒருவருக்கு வராது. ஏனென்றால் அவர் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தன்னையும் தனது குடும்பத்தினரையும் தனது நண்பர்களையும் மாற்றிக் கொள்வார். இதனால் தீயவர்களுக்குத் துன்பம் வருவது தெரியாது. மீறித்

துன்பங்கள் வந்தாலும் எவ்வகையிலாவது அதை நீக்கி விடுவார்கள். அதனால் பெருந்துன்பம் உண்டானாலும் அவர்கள் கவலைப்படமாட்டார்கள். அசுரர்களைப் போலத் தீமைகள் செய்வதிலேயே இன்புறுவார்கள். இது தான் உலக நியதி. ஆனால் இவர்களுக்குத் தீய செயல்களால் ஆபத்துக்கள் அடிக்கடி வரும். சில சமயம் அது உயிரையும் எடுத்துவிடும்.

## கடவுளின் இருப்பிடம் எது? அதை எவ்வாறு அறிந்து கொள்ளலாம்?

"கடவுள் எங்கே இருக்கிறார்?" என்று ஒரு சிறிய பாடசாலைக்குச் செல்லாத குழந்தையைக் கேட்டால் அது உடனே; 'கோயிலில் இருக்கிறார்' என்று சொல்லும்.

ஒரு சாதாரண மனிதனைக் கேட்டால் 'கடவுள் இல்லாத இடமேயில்லை' என்பான். அதைவிட, "அவர், தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார்" என்பான்.

ஒரு ஞானியைக் கேட்டால் அவர், "ஒவ்வொரு உயிரிலும் அவர் இருக்கிறார்" என்பார்.

நாத்திகனைக் கேட்டால், "கடவுள் என்று ஒருவர் இருந்தால் தானே அவர் எங்கே இருக்கிறார் என்று கூறமுடியும்" என்பான்.

ஒரு புனிதமான சேவையாளனைக் கேட்டால் அவன்; "விருப்பு வெறுப்பில்லாத சேவையில் தான் கடவுள் இருக்கிறார்" என்று சொல்வான்.

எல்லா உயிர்களிலும் அன்புள்ளவனைக் கேட்டால்; "அன்பில் தான் இறைவன் உள்ளான். அன்பு தான் சிவம்" என்பான்.

இப்படி ஒவ்வொருவரும் இறைவனின் இருப்பைப் பற்றி ஒவ்வொரு விதமாகக் கூறுவார்கள். அவை யாவற்றையும் தொகுத்துப் பார்த்தால் "அன்பே சிவம்" என்ற கோட்பாடு வெளிப்படும்.

"உயிர்கள் மீது செலுத்தப்படும் அன்பு இறைவனைச் சென்றடையும்" என்று முண்டக உபநிடதம் கூறுகிறது. இதற்காக ஒரு கதையையும் அது கூறுகிறது. அது பற்றி நான் முன்பு எழுதியுள்ளேன்.

வேதம் இயற்கை முழுவதையும் தெய்வங்களாக உருவகித்துள்ளது. வேதத்தில் உள்ள 33 தெய்வங்களும் இயற்கையே. வேதங்கள் இயற்கைக்குப் பெயர்களை இட்டு அவற்றைத் தெய்வமாக்கியுள்ளது.

சூரியனைச் 'சூரியதேவன்' என்றும், பூமியைப் 'பூமாதேவி' என்றும், தீயை 'அக்கினி பகவான்' என்றும் பெயர்களிட்டு அவற்றைத் தெய்வமாக்கியுள்ளது. அந்த நிலை இன்றும் போற்றப்படுகிறது.

இந்துக்கள் தைமுதல் நாளன்று உணவுப் பொருட்களைத் தரும் சூரியனுக்கு நன்றிக்கடன் தீர்க்கப் பொங்கிப் படைக்கிறார்கள்.

பூமியோடு சம்பந்தப்பட்ட எதைச் செய்தாலும் பூமியை வணங்காது அதை இந்துக்கள் செய்யமாட்டார்கள்.

அக்கினி தான் உயிர்களையும் இறைவனையும் இணைத்து வைப்பவன் என்று வேதங்கள் கூறுகின்றன.

அதனால் மக்கள் இறைவனுக்குக் கொடுக்கும் பொருட்களை அந்தணர்கள் ஓமகுண்டத்தில் சுவாலிக்கும் அக்கினிக்குள் இடுவார்கள். அவை இறைவனைச் சென்றடையும் என்ற நம்பிக்கை இன்றும் மக்களுக்கு உண்டு.

உலகின் ஓர் அணுவில் கூட இறைவன் இருக்கிறான் என்ற நம்பிக்கை இந்துக்களுக்கு உண்டு.

ஒரு மரம் அசைவதைப் பாருங்கள். ஏன்? எதற்காக? எப்படி? அது அசைகிறது என்று நினைக்கிறீர்கள்.

யாரும் இதைத்தொடவில்லை. காற்றை யாரும் கண்களால் கண்டதில்லை. கண்களால் காணாத ஒரு பொருளின் இருப்பை எவ்வாறு நிரூபிக்க முடியும்?

எனவே காற்று மரத்தை அசைக்கிறது என்று நம்புகிறோம். அது போலத்தான் கடவுள் உலகெங்கும் உள்ளார் என்பதை நம்வேண்டும்.

நான் சிறு வயதில் வாசித்த கதையொன்று எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது.

ஒரு விவசாயி தனது வாழைத்தோட்டத்தில் இருந்த வாழைக்குலையொன்றை, அது பழுத்ததும் அம்பாளுக்குப் படைப்பதாக நேர்த்திக்கடன் வைத்தான்.

அந்த வாழைக்குலை பழுத்துவிட்டது. அதைவெட்டிக் கொண்டு அம்பாளின் கோயிலுக்குச் சென்றான்.

வழியில் ஒரு மூதாட்டி நிற்கிறாள். அவர் விவசாயியைப் பார்த்து; ‘‘மகனே, எனக்குப் பசி வயிற்றைக் கிள்ளுகிறது. இரண்டு நாட்களாக நான் உணவு உண்ணவில்லை. ஒரு பழம் தா’’ என்று கேட்டாள்.

“அம்மா, நான் இப்பழங்களை அம்பாளுக்குப் படைத்துவிட்டுத் தருகிறேன். தயவு செய்து என்னுடன் வா” என்றான்.

“ஐயோ, என்னால் நடக்கமுடியவில்லை. ஒரு பழம் தா”என்று இரந்தாள் அம் மூதாட்டி.

விவசாயிக்கு அம்பாளுக்குப் படைக்குமுன் வாழைப் பழத்தை அம் மூதாட்டிக்குக் கொடுக்க விருப்பமில்லை. அதனால் அவன்; “தாயே சில கணங்கள் இங்கேயே இருந்துகொள்ளுங்கள். நான் அம்பாளுக்குப் படைத்துவிட்டுக் கொண்டுவருகிறேன்” என்று கூறிவிட்டுச் சென்று வாழைக் குலையை கோயில் வளையில் கட்டினான். அவன் கட்டக் கட்ட வாழைக்குலை அறுந்து விழுந்தது. அதனால் மனங்கலங்கிய விவசாயிஇ “அம்பாளே, ஏன் இப்படிச் செய்கிறாய்?” என்று அழுதான். அப்பொழுது; “மனிதா, நான் பசியோடு வீதியில் வந்து நின்று கேட்டபோது நீ தரவில்லை. இப்பொழுது எனக்கு வேண்டாம்” என்று ஓர் அசரீதி வானில் ஒலித்தது.

இறைவன் எங்கும் இருக்கிறார்; எந்த வடிவிலும் வருவார்; பக்தர்களுடன் அவர் கூடிச் செல்வார்.

இதை விளக்கவும் ஒரு கதையுண்டு.

மஹாவிஷ்ணு மீது அளவில்லாத பக்தி கொண்ட யானை ஒன்று நீராடுவதற்காகக் குளத்திற்குச் சென்றது. குளத்தில் இருந்த முதலை ஒன்று யானையின் கால்களைப் பிடித்து இழுத்தது. உடனே யானை, “பகவானே, என்னைக் காப்பாற்று” என்று அலறியது. அக்கணமே மஹாவிஷ்ணு தோன்றி அந்த முதலையைக் கொன்றார்.

உலகெங்கும் இறைவன் இருப்பதால் தான் பக்தர்கள் அழைக்கும் ஓசை அவருக்குக் கேட்கிறது.

“எல்லா மனிதர்களினதும் உள்ளத்தில் கடவுள் இருக்கிறார். ஆனால் கடவுளின் உள்ளத்தில் தான் மனிதர்கள் இல்லை” என்ற ஒரு மஹா வாக்கியத்தை நான் படித்துள்ளேன்.

வள்ளுவர் தெய்வத்தின் இருப்பைப் பற்றிப் பல குறள்களில் சொல்லியுள்ளார்.

முகமலர்வோடு விருந்தினரை வரவேற்று உபசரிக்கின்றவனது வீட்டில் மனமகிழ்வோடு திருமகள் வாழ்வாள்.

பொறாமை உடையவனைக் காணப் பொறுக்காத திருமகள், தன் தமக்கைக்கு அவனைக் காட்டிவிட்டு நீங்கிச்சென்று விடுவாள்.

ஓர் உயிரைக் கொல்லாமலும் அதன் புலாலை உண்ணாமலும் வாழ்கின்றவனை உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கை கூப்பித் தொழும்.

தவ வலிமையினால் தன்உயிர் தான் என்ற பற்றுக்களை விட்டவனை மற்றய உயிரிகள் எல்லாம் வணங்கும்.

நீதி நெறி முறைகள் தவறாமல் ஆட்சி செய்யும் அரசனை, மக்கள் இறைவனின் இடத்தில் வைத்துப் போற்றுவார்கள்

“அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்று இந்து தர்ம நூலென்று கூறுகிறது.

மாதா, பிதா குரு ஆகியவர்களுக்கு அடுத்ததாகத்தான் இந்து தர்மம் தெய்வத்தை வைத்துள்ளது. இதிலிருந்து

தாயையும், தந்தையையும், குருவையும் தெய்வமாகப் போற்றுதல் வேண்டும் என்ற தத்துவம் கூறப்படுகிறது.

இதை விளக்க; “தாயிற் சிறந்ததொரு கோயில் இல்லை” என்றொரு தத்துவ மொழியும் கூறப்பட்டுள்ளது.

இந்து மதம் மிருகங்களையும், பறவைகளையும், மரங்களையும், நதிகளையும் தெய்வமாக்கி வைத்துள்ளது.

சிங்கம், புலி, நாய், எலி, மயில், கருடன், காகம், பாம்பு, காளைமாடு, பசு போன்றவற்றைத் தெய்வமாக்கியுள்ளது.

புனித நதிகள் பலவும் இறைவனின் இருப்பிடங்கள்.

வேம்பு, அத்தி, வில்வை. ஆல், அரசு, வன்னி போன்ற பல மரங்கள் தெய்வத்தின் இருப்பிடங்கள்.

நாற்சந்திகள், முச்சந்திகள், மரநிழல்கள், நீர் நிலைகள் யாவற்றிலும் பிள்ளையார் வீற்றிருக்கிறார்.

தானியங்கள், நூல்கள், தொழிலாளர்களின் ஆயுதங்கள் யாவற்றிலும் இறைவன் வீற்றிருக்கிறார். இதனால் தொழிலாளர்கள் தமதுஆயுதங்களைக் கடவுளாக மதிக்கின்றனர். அதற்குப் பூசை செய்கின்றனர்.

வீதியால் செல்லும் வாகனங்களை அவதானித்துப் பாருங்கள். எல்லா வாகனங்களுக்குள்ளும் கடவுளின் படங்கள் இருக்கும்.

வாகனத்தை இயக்கு முன் சாரதி தனது வாகனத்தைத் தொட்டு வணங்கும் முறை எல்லா மதங்களிலும் இருக்கிறது.

மரத்தாலும், மரத்தின் பாகங்களினாலும், கல்லாலும், செம்பு, பொன், வெண்கலம் போன்றவற்றாலும் இறைவனின் உருவங்கள் செய்யப்படுகின்றன. இவற்றிலெல்லாம் இறைவன் குடிகொண்டிருக்கிறார்.

பகவத்கீதையின் ஏழாம் அத்தியாயத்தில் மஹாவிஷ்ணு இவ்வாறு கூறுகிறார்.

‘‘தனஞ்சயா, எனக்கு மேலானது வேறு எதுவும் இல்லை. நூலிலே மணிகள் போன்று இவை யாவும் என்மீது கோர்க்கப்பட்டுள்ளன. நான் நீரில் சுவையாகவும், சந்திர சூரியர்களிடத்து ஒளியாகவும், எல்லா வேதங்களிலும் ஓங்காரமாகவும், வானில் ஓசையாகவும், மக்களிடத்து ஆண்மையாகவும் இருக்கிறேன்’’.

‘‘மண்ணில் நறுமணமாகவும், தீயில் சுடராகவும், எல்லா உயிர்களுள் உயிர்ப்பாகவும், தவசிகளுள் தபசாகவும் இருப்பது நான்’’.

‘‘எல்லா உயிர்களின் நிலைபேறுடைய வித்தென்று என்னை அறிக, அறிவாளர்களுடைய அறிவாகவும், தேஜஸ்விகளுடைய தேஜஸ் ஆகவும் நான் இருக்கிறேன்’’.

‘‘பலவான்களிடத்துக் காமமும் ராகமும் நீங்கப் பெற்ற சாமர்த்தியமாக நான் இருக்கிறேன். உயிர்களிடத்து தர்மத்திற்கு முரண்படாத காமமாக இருக்கிறேன்’’

‘‘சத்வரஜஸ்தாமோ குணங்களில் உண்டான பொருட்களெல்லாம் என்னிடத்திலிருந்தே தோன்றியவை’’

இவ்வாறு பகவான் மஹாவிஷ்ணு அரிச்சுனனுக்குக் கூறுகிறார்.

இதிலிருந்து உலகில் உள்ள யாவும் மஹாவிஷ்ணுவில் இருந்து தோன்றியவை என்று அறிந்து கொள்ள முடிகிறது.

பகவத்கீதையின் பத்தாவது அதிகாரமான வீபூதி யோகத்தில் மஹாவிஷ்ணு இவ்வாறு கூறுகிறார்.

‘‘நான் அனைத்திற்கும் பிறப்பிடம். யாவும் என்னிலிருந்தே தோன்றின’’

‘‘எல்லா உயிர்களின் உள்ளத்துள் உறையும் ஆத்மா நானே. உயிர்களின் ஆதியும் இடையும் இறுதியும் நானே’’

‘‘ஆதித்தியர்களுள் நான் விஸ்ணு; ஒளிர்பவைகளுள் சூரியன், மருத்துக்களுள் மரீசி, நட்சத்திரங்களுள் சந்திரன்’’

‘‘வேதங்களில் நான் சாமவேதம், தேவர்களுள் இந்திரன், இந்திரியங்களுள் மனம், உயிர்களுள் உணர்வு’’

‘‘ருத்திரர்களுள் சங்கரனாகவும், ‘ர‘ஸர்களுள் குபேரனாகவும், வசுக்களுள் அக்கினியாகவும், மலைகளுள் மேருமலையாகவும் நான் இருக்கிறேன்’’ சங்கரன் என்பது சிவனைக் குறிக்கும். ‘‘அரியும் அரனும்’’ ஒருவர் என்று இந்து மதங்கள் கூறுவதுண்டு.

‘‘சேனைத் தலைவர்களுள் நான் முருகக் கடவுள். நீர் நிலைகளுள் நான் கடல், மஹாரிஷிகளுள் நான் பிருகு. வாக்குகளுள் நான் பிரணவம், மரங்கள் எல்லாவற்றினுள் நான் அரசமரம் தேவரிஷிகளுள் நான் நாரதர், சித்தர்களுள் நான் கபிலமுனி. குதிரைகளுள் நான் உச்சை சிரவஸ், யானைகளுள் நான் ஐராவதம், மக்களுள் நான் வேந்தன்’’.

‘‘ஆயுதங்களில் நான் வஜ்ராயுதம், பசுக்களுள் நான் காமதேனு, பாம்புகளில் நான் வாசுகி, நாகங்களுள் நான் அனந்தன், அடங்கியாள்பவர்களுள் நான் யமன், விலங்குகளில் நான் சிம்மம், பறவைகளுள் நான் கருடன்’’.

“தூய்மைப்படுத்துபவர்களுள் நான் காற்று, ஆயுதம் ஏந்தியவர்களில் நான் இராமன், மீன்களுள் நான் மகரமீன், நதிகளுள் கங்கையாக நான் இருக்கிறேன்”.

“எழுத்துக்களுள் நான் அகரம், கூட்டுச் சொற்களுள் நான் இருசொற்கூட்டு, அனைத்தையும் அழிக்கும் மரணமும் நானே. செல்வங்களில் வளர்செல்வம் நான்; பெண்மைக்குள் நான் புகழ், திரு, செல்வம், சொல், நினைவு, அறிவு, திண்மை, பொறையாக இருக்கின்றேன்”.

மாதங்களில் நான் மார்கழி மாதம்; பருவங்களில் நான் வசந்தகாலம், வெற்றியாகவும், முயற்சியாகவும் சத்துவ குணமாகவும் நான் இருக்கிறேன்”.

“விருஷ்ணிகளில் நான் வாசுதேவன்; பாண்டவர்களுள் தனஞ்ஜயன், முனிவர்களுள் வியாசர், கவிஞர்களுள் நான் சுக்கிரன், தண்டிப்பவர் பால் நான் செங்கோல், வெற்றி வேண்டுபவரிடத்து நான் நீதி, இரகசியங்களுள் மௌனம், ஞானிகளுள் ஞானமும் நான் தான்”

“எல்லா உயிர்களுக்கும் வித்து எதுவோ, அது நான், என்னையன்றி ஜங்கமஸ்தாவரங்களில் வாழ்வது எதுவுமில்லை”.

“மகிமையும், அழகும் வலிவும் உடையது எது எதுவோ அதெல்லாம் எனது பிரபையின் ஒரு பகுதி”

இவ்வாறு மஹாவிஷ்ணு பகவத்கீதையில் தனது இருப்பைப் பற்றிக் கூறுகிறார். இதிலிருந்து உலகில் உள்ள பொருட்களிலெல்லாம் இறைவன் உறைந்திருப்பது தெரிகிறது.

வேதம் உயிர்களும், உலகும், பிரம்மத்திலிருந்து தோன்றியவை என்று கூறுகிறது. அந்தப் பிரமம் தான் கடவுள்.

மேற்கூறப்பட்டவற்றில் இருந்து கடவுளின் இருப்பை அறிந்து கொண்டீர்கள். இனி கடவுளை எவ்வாறு அறிந்து கொள்ளலாம் என்பதைப் பார்ப்போம்.

திருக்குறள் கடவுள் எண்குணத்தவன் என்று கூறுகிறது.

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

எண்குணங்களாவன, தன்வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில்லா ஆற்றல் உடைமை, வரம்புஇல் இன்பம் உடைமை என்பனவாகும்.

இறைவன் விருப்பு வெறுப்பு இல்லாதவன் ஆகையால் எந்த ஓர் உயிருக்கும் சார்பாக இருக்கமாட்டான். விதிவலியது. விதிப்படி தான் யாவும் நடைபெறும் என்று இந்துசமய தத்துவ நூல்கள் கூறுகின்றன. ஆனால், விதியை நல்ல செயல்கள் மூலம் மாற்றியமைக்கலாம். இறைவன் உயிர்களுக்குப் பல பிறவிகளைக் கொடுத்துள்ளான். அதில் சிறந்த பிறவி மனிதப் பிறவியாகும். மனிதனாகப் பிறந்தவன் நல்ல செயல்களைச் செய்தல் வேண்டும்.

இல்வாழ்வான் தன் பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய மூன்று தரப்பினருக்கும் நல்வழி நின்று தக்கதுணை புரிதல் வேண்டும்.

தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தவர் என்பவர்களுடன் தன்னையும் போற்றுதல் இல்வாழ்வானது தலையாய கடனாகும்.

பிறரையும் அறவழியில் வாழச்செய்து தானும் அறவழியில் இருந்து விலகாது வாழ்பவனது இல்வாழ்க்கை

தவம் செய்வாரைவிட மிக்க வலிமை உடைய வாழ்க்கையாகும்.

அறநெறிக்குட்பட்டு இவ்வுலகில் வாழும் இல்வாழ்வான் வானுலகில் வாழும் தெய்வங்களைப் போலப் போற்றப்படுவான்.

மனைவியின் நற்பண்புகளே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்றும் அதன் பேறாக நல்ல மக்களைப் பெறுதலே நல்லணிகலம் என்றும் பெரியோர் கூறுவர்.

பொருள்களைத் தேடிக்காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் பேணி உதவி செய்யும் பொருட்டே ஆகும்.

உண்மைப் பொருளை உணர்ந்தவர்களின் வாய்ச்சொற்கள், அன்பு கலந்த வஞ்சகமற்ற இன்சொற்களாகவே எப்பொழுதும் இருக்கும்.

பிறருக்குத் துன்பத்தைக் கொடுக்கும் சிறுமையில் இருந்து நீங்கிய இனியசொற்கள், இம்மையிலும் மறுமையிலும் பேசுவோருக்கு இன்பம் தரும்.

ஒருவன் திணையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயனை அறிந்தவர் அதனைப் பனையளவாகக் கொள்வர்.

தன்னோடு தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் அவரோடு முறையோடு பொருந்தி நடந்தால் நடுவு நிலைமை என்று கூறப்படும். அது நன்மை பயக்கும்.

ஒழுக்கத்தில் இருந்து மாறுபடாது அடங்கி வாழ்வோனது உயர்வு, மலையின் உயர்வை விட உயர்ந்ததாகும்.

சினத்தை அடக்கி, கற்க வேண்டியவற்றைக் கற்று அடக்கம் உடையவனாக வாழும் ஒருவனை, தரும தேவதை தேடிச்சென்று குறைநிறைகளைக் கேட்டு உதவி செய்வாள்.

தீய சொற்களைத் தவறியும் தம் வாயால் ஒழுக்கமுடையவர்கள் சொல்லமாட்டார்கள்.

பிறனுடைய மனைவியை இச்சையுடன் நோக்காத ஆண்மை ஆன்றோர்க்கு அறம் மட்டும் அன்று; நிறைந்த ஒழுக்கமும் ஆகும்.

துன்பத்திற்காக வருந்தி, அறம் அல்லாதவற்றை செய்யாமல் இருப்பதே நன்று.

யாரிடத்தும் பொறாமை கொள்ளாமல் இருத்தலே ஒருவன் பெறத்தக்க பேறுகளிலெல்லாம் மேலானது. அதற்கொப்பானது வேறு இல்லை.

நடுவு நிலை இல்லாமல் பிறரின் பொருளை ஒருவன் கவர நினைத்தால், அவனது குடி கெடுவதோடு குற்றமும் வந்து சேரும்.

ஒருவன் அறத்தைப்பற்றிப் பேசாது அறமல்லாதவற்றைச் செய்தாலும், மற்றவனைப்பற்றி புறங்கூறாமல் இருக்கிறான் என்று சொல்லப்படுவது நன்று.

பயன் ஏதும் இல்லாத பண்பற்ற சொற்களைப் பலரிடத்தும் பேசுதல், அறத்தோடு பொருந்தாமல் நன்மைகளில் இருந்து நீங்கச் செய்யும்.

தீய செயல்கள் எப்பொழுதும் தீமை விளைவிக்குமாதலால், தீய செயல்களை தீயைவிடக் கொடியதாகக் கருதி அஞ்சுதல் வேண்டும்.

ஒப்புரவாளன் சிரமப்பட்டுப் பொருட்களைத் தேடுவது தக்கவர்களுக்கு உதவி செய்வதற்கே ஆகும்.

தான் பெற்ற உணவை பிறருடன் பகிர்ந்துண்ணும் வழக்கம் உடையவர்களைப் பசி என்னும் தீய நோய் நெருங்க மாட்டாது.

பல்வேறு சிறப்புக்களைத் தருகின்ற பெருஞ் செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும், பிறருக்குத் துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவர்களின் கொள்கையாகும்.

மிக உயர்ந்த அறச் செயல் என்பது உயிர்களைக் கொல்லாமல் இருப்பது. அதற்கடுத்த அறம் பொய் சொல்லாமல் இருப்பது.

மேற்கூறியவாறு வாழ்பவன் கடவுளுக்குச் சமனாவான். அப்படி வாழ்பவர்களோடு இறைவன் எவ்வேளையிலும் கூடியிருப்பார். கடவுள் பக்தியுள்ள ஒருவனுக்கு வரும் துன்பங்களை மேற்கூறியோர், அவனைத் தேடிச் சென்று விலக்கிவிடுவார்கள்.

எமது நாட்டை எடுத்துக் கொள்வோம். அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பல இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து தமது நல்வாழ்விற்காகப் பிறதேசங்களிற்குச் சென்றுவிட்டார்கள்.

பணம் தேடுவதற்காகச் சென்றவர்கள் பலர்.

நிம்மதியைத் தேடிச் சென்றவர்கள் பலர்.

ஆடம்பரமாக வாழச் சென்றவர்கள் பலர்.

அப்படிச் சென்றவர்களுள் கற்றவர்கள் தான் அதிகமானவர்கள்.

கல்விமான்கள், வைத்திய நிபுணர்கள், பொறியியலாளர்கள் எனப்பல இலட்சம் பேர் வெளிநாடுகளுக் குச் சென்று கூலி வேலைகளைச் செய்து வயிற்றை நிரப்பி மகிழ்வுறுகின்றனர். அவர்கள் இங்கு வாழும் கல்வி மான்களையும், பொறியியலாளர்களையும், வைத்திய நிபுணர்களையும் புத்தி சுவாதீன முள்ளவர்கள் என்று தான் நினைக்கிறார்கள்.

யாழ்ப்பாண வைத்தியசாலையை எடுத்து நோக்கினால் எத்தனையோ வைத்தியர்கள் கடமையாற்றுகின்றனர்.

விபத்து ஒன்றில் சிக்கி மிகவும் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்படும் ஒருவனுக்குச் சிகிட்சை செய்ய வைத்தியர்கள் இல்லாவிட்டால் என்ன நடக்கும்?

கண்களில் நோய் வந்து அதனால் பெரும் சிரமப்படும் ஒருவனுக்குச் சிகிச்சை அளிக்க வைத்தியர் இல்லாவிட்டால் என்ன நடைபெறும்?

பெரும் நோய்க்கு ஆட்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் ஒருவனைப் பரிசீலித்துத் தகுந்த மருந்து கொடுக்க வைத்தியரில்லாவிட்டால் என்ன நடைபெறும்?

இதைப்பற்றிச் சிந்தித்த வைத்தியர்கள் மட்டும் தமக்கும், தமது குடும்பத்தினருக்கும் வரும் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு தியாக மனப்பாங்குடன் சேவை செய்கிறார்கள். மேலைநாடுகளில் கூலிவேலை செய்பவர்களே இவர்களைவிட நூறு மடங்கு பணம் சம்பாதிக்கிறார்கள். இருந்தும் அவர்கள் சொகுசான வாழ்க்கையையும், கைநிறைய வரும் சம்பளத்தையும் ஒதுக்கிவிட்டுப் பிச்சைச் சம்பளத்துடன் நோயுற்ற மக்களுக்குச் சேவை செய்கிறார்கள்.

‘‘நோயைத் தீர்ப்பவர் கடவுள்’’

:நினைத்தவற்றைத் தருபவர் கடவுள்’’.

‘‘பிரதியுபகாரத்தை எதிர்பாராது இருபத்துநான்கு மணி நேரமும் உயிர்களின் மீது பற்றுக்கொண்டு அவற்றிற்கு உதவி செய்பவர்கள் கடவுள்’’.

மேற் சொன்னவை யாவற்றையும் யாழ்ப்பாண வைத்தியசாலையில் கடமை புரியும் வைத்தியர்கள்

செய்கிறார்கள். அதனால் அவர்கள் எல்லோரும் ‘கடவுளர்’ என்றே நான் சொல்வேன்.

எனது இனத்தவர் ஒருவருக்கு இடது முழங்காலில் சிறிது வீக்கம் இருந்தது. அவர் அதற்குக் கைவைத்தியம் செய்தார். நோய் குறையவில்லை.

ஒருநாள் இரவு பத்துமணி போல் அவரது கால் பெரிதாக வீங்கியது. விறைத்துச் செயலிழந்து விட்டது. இரவு ஒன்பது மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்துவிடும். அதனால் யாரும் வெளியே செல்லமாட்டார்கள்.

நோய்வாய்ப்பட்டவரின் மனைவி பலரிடம் சென்று தனது கணவரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு உதவி செய்யும்படி இரந்தார். பலர் மறுத்துவிட்டனர்.

ஒருவன் அதற்கு உடன்பட்டான். அவன் அவரின் இனத்தவன் அல்ல. ஐந்து பிள்ளைகள் அவனுக்கு. தனது வாகனத்தில் நோயுற்றவரையும், அவரது மகனையும் ஏற்றிக்கொண்டு ஐந்து மைல்களுக்கு அப்பால் இருக்கும் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றான்.

இரவில் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிட்சை செய்யும் வைத்தியர்கள் உடனே அவரைப் பரிசோதித்தனர்.

அவருக்குச் சில தினங்களுக்கு முன்பு நீரிழிவு நோய் ஆரம்பமாகி இரத்தத்தில் சீனியின் அளவு 375 ஆக உயர்ந்திருந்ததைக் கண்டுபிடித்தனர்.

நீரிழிவு நோய் மிகவும் அபாயமானது. அதிலும் சீனியின் அளவு இரத்தத்தில் 375 வரை உயர்ந்திருந்தது ஆபத்தை விளைவிக்கக் கூடியது. உடன்கொண்டு சென்றமையால் வைத்தியர்கள் அவரைத் தீவிரசிகிச்சைப் பிரிவில் அனுமதித்து

விடியும் வரை பரிசீலனை செய்து, மருந்துவகைகளைக் கொடுத்துக் கொண்டே இருந்தனர்.

உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற அந்த நல்லவன் ‘கடவுள்’ தானே.

பலர் மறுத்த போதும் தனது உயிரை மதிக்காது பிற உயிரின் வேதனையைத் தீர்த்தவன் ‘கடவுள்’.

இரவில் சென்றாலும் உரிய சிகிட்சை அளித்த வைத்தியர் கடவுள்.

இன்னொரு நாள் ஒரு சிறுவனுக்குப் பாம்பு தீண்டிவிட்டது. மிகவும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அச்சிறுவனைக் காப்பாற்றிய வைத்தியர்கள் கடவுள் தானே.

யாழ்ப்பாணத்தில் வாழும் தொழிலதிபரான பேரம்பலம் நாகரத்தினம் என்பவர் கல்வி நடவடிக்கைக்காகப் பல இலட்ச ரூபாவைக் கொடுத்து வருகிறார்; பல இலட்ச ரூபா பரிசுப் பொருட்கள் கொடுத்து வருகிறார். கொடுப்பவர் கடவுள் தானே.

யாழ்ப்பாண இலக்கிய வட்டத்தின் தலைவரான செங்கையாழியன் என்ற புனைபெயரைக் கொண்ட கலாநிதி க. குணராசா அவர்கள் தமிழ் மக்களின் துன்பங்கள், வாழ்க்கை முறைகள், கல்வி, கலை, கலாச்சாரம், பண்பாடுகள் பற்றி எழுதி வருகிறார். அத்துடன் புவிவியல் பாடத்திற்குப் பல நூல்களை எழுதியுள்ளார். கலை, கலாச்சாரத்தைப் பாதுகாப்பதுடன் கல்விச் சேவையையும் செய்யும் அவர் கடவுளின் அவதாரம்.

“தீமைகள் கட்டுக்கடங்காத போது நான் அவதரித்துத் தீமைகள் செய்வோரை அழித்து நல்லவர்களைக் காப்பேன்”

என்றும், ‘‘தேவை கருதியும், ஒரு இனத்தின் கலை, கலாச்சாரம், பண்பாடு என்பன அழியும் போதும் நான் உரியவரைத் தோற்றுவித்து அதைக் காப்பேன்’’ என்றும் மஹாவிஷ்ணு பகவத்கீதையில் கூறுகிறார்.

இதன்படி உலக மஹாகவியான பாரதியாரின் ஞானகுருவான யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமியின் பேரனான கலாநிதி கந்தையா குணராசா அவர்கள் ஈழத்திரு நாட்டில் அவதரித்து இலக்கியப் பணிகள் பலவும் செய்து வருகிறார்.

குவேனி, ஈழராஜா எல்லாளன், கந்தவேள் கோட்டம், கடற்கோட்டை போன்ற வரலாற்று நாவல்களையும் இலங்கைச் சுருக்க வரலாறு கி.மு. 6ஆம் நூற்றாண்டிலிருந்து 2007 வரை போன்ற வரலாற்று நூல்களையும் எழுதி நம்மாவரது சரித்திரத்தை ஆவணப்படுத்தியுள்ளார்.

சமகாலச் சமூகப் பிரச்சினைகள் முழுவதையும் தனது 45 நாவல்களிலும் புகுத்தியுள்ளார். தமிழ் இனத்தின் வரலாற்றைப் பிற்சந்ததியினருக்குத் தெரிவிப்பதற்காகத் தன்னை அர்ப்பணித்து எழுதுவதோடு மட்டும் நின்று விடாது கமலம் பதிப்பகத்தை நிறுவி அதன் மூலம் பல நூல்களை வெளியிட்டும் வருகிறார். இவரது இப்பணி நம் இனம் பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வந்த வரலாற்றை, இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்த பின்பும் வாழும் எம் மக்களுக்குத் தெரிவிக்கும்.

செயற்கரியனவற்றைச் செய்பவன் கடவுளின் கிருபை பெற்றவன். அவனுள் கடவுள் இருந்து அவனைக் கொண்டு பிற் சந்ததியினருக்காக எழுதுவிக்கிறார் என்று தான் சொல்லல் வேண்டும்.

தென்மராட்சியில் உள்ள கோவிலாக்கண்டி என்ற கிராமத்தில் பிறந்து கோப்பாயைச் சேர்ந்த சேனாதிராஜாவைத் திருமணம் செய்து பேரோடும் புகழோடும் விஷகடி வைத்தியம் செய்த திருமதி பொன்னாச்சிப்பிள்ளையை வடபகுதியில் உள்ளவர்கள் இன்றும் மறக்கமாட்டார்கள். அவரது தந்தையார் செய்த விஷகடி வைத்தியத்தைத் தொடர்ந்து செய்து வந்த வைத்திய மேதை. வடபகுதியில் உள்ள எந்தக்கிராமத்திலாவது யாருக்காவது விடம் தீண்டினால் அவரிடம் தான் வைத்தியம் பார்க்க வருவார்களே தவிர வைத்தியசாலைக்குச் செல்லமாட்டார்கள். எனக்கும் அறுபதாம் ஆண்டு பாம்பு தீண்டியது. அவர் தான் குணப்படுத்தினார். எனது மாமியாருக்குப் பாம்பு தீண்டி மிகவும் ஆபத்தான நிலையில் சிலநாட்கள் இருந்தார். அவரிடம் வந்தவர்கள் எவரும் இறந்ததாக நான் அறியவில்லை. நீறும், வேப்பிலையும் கொண்டே உடலில் ஏறிய விடத்தை இறக்குவார்.

இரக்க சிந்தையும், கடவுள் பக்தியும் மிகுந்த பொன்னாச்சிப்பிள்ளையிடம் ஆயிரக்கணக்கானோர் சிகிட்சை பெற்றுச் சுகப்பட்டனர். இறக்கும் தறுவாயில் வரும் மனிதர்களை அன்போடு அரவணைத்து கடவைள வேண்டி அவர்களைக் காப்பாற்றிய திருமதி பொன்னாச்சிப்பிள்ளை சேனாதிராஜா அவர்கள் கோப்பாய் மக்களுக்கு மட்டுமல்லாது வடபகுதி மக்களுக்கும் கடவுளாகத் திகழ்ந்தார். இவர் நாகதம்பிரான் மீது அளவில்லாத பற்றுக் கொண்டவர். தனது பக்தியை வெளிப்படுத்தத் தான் பிறந்த ஊரில் ஸ்ரீநாகதம்பிரானுக்குக் கோவில் அமைத்துக் கும்பாவிஷேகம் செய்வித்தார். இவர் இறைவனின் இருப்பிடம் என்று சொன்னால் யாராலும் மறுக்க முடியாது.

அசாதாரண சூழ்நிலையில் வாழும் மக்களுக்கு உதவுபவர்கள் கடவுள்கள் தானே.

ஒருவனுக்குத் துன்பம் ஏற்படும் போது பிரதியுபகாரம் கருதாமல் உதவுபவன் கடவுள்.

வெளிநாடுகளுக்குச் செல்லாது நமது ஊரில் உள்ள பல்கலைக்கழகங்களில் கற்பிக்கும் விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள் யாபேரும் கடவுள் தான்.

அவர்கள் இல்லாவிட்டால் வைத்தியர்கள், கல்வி மான்கள் யாரும் உருவாக முடியாது. அப்படி உருவாகாவிட்டால் யாழ்ப்பாணச் சந்ததியினர் அறிவில்லாத மூடர்களாகி விடுவார்கள்; நோயாளிகளாகியும் விடுவார்கள்.

ஒரு பெண் திருமணவீட்டிற்குச் செல்வதற்காக ஓர் இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை இரவல் வாங்கி அணிந்துகொண்டு திருமண வீட்டிற்குச் சென்றாள்.

அச்சங்கிலி தொலைந்துவிட்டது. இரவல் கொடுத்தவள் அதை நம்ப மறுத்தாள். அவளது கணவன் குடிகாரன். அவன்தான் திருடிச் சென்றுவிட்டான் எனக் காவல்துறையில் புகாரிடச் சென்றாள் சங்கிலியைக் கொடுத்தவள்.

அங்கே காவல்துறையினர் ஒரு சங்கிலியைக் காட்டினர். அச்சங்கிலி தெருவில் இருந்ததாகவும் அதைக் கண்டெடுத்த ஒருவர் தம்மிடம் ஒப்படைத்ததாகவும் காவல்துறைத் தலைமை அதிகாரி கூறினார். ஒப்படைத்த அந்த நல்ல மனிதனைத் தேடிச் சென்று நன்றி கூறினார்கள். பெறுமதி மிக்க அந்தச் சங்கிலியைத் திருப்பிக் கொடுத்தவன் கடவுள் தானே.

பட்டணத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றிற்கு அனுமதி கோரியிருந்தார் எனது ஊரவர் ஒருவர். பலமுறை முயன்றும் அனுமதி கிடைக்கவில்லை. ஒருமுறை அவர்

பாடசாலைக்குச் சென்ற போது முன்பின் அறிமுகமில்லாத ஒருவர் எனது ஊரவரின் துன்பத்தை உணர்ந்து அப் பாடசாலையின் அதிபரோடு கதைத்து அனுமதி எடுத்துக் கொடுத்தார். அனுமதி எடுத்துக் கொடுத்தவர் தனது குலதெய்வமான வெள்ளெருவைப் பிள்ளையார் என்று எனது ஊரவர் பலகாலமாகச் சொல்லி வருகிறார். அவரது மகன் பொறியியல் கல்லூரிக்குத் தெரிவாகிவிட்டான். தெரிவாவதற் குக் காரணம் அந்த அனுமதி எடுத்துக் கொடுத்த நல்லவர் என்று எனது ஊரவர் சொல்கிறார்.

எனது இன்னொரு நண்பரின் மகள் இளமையில் ஊரில் உள்ள ஒருவனைக் காதலித்தாள். மிகவும் தீவிரமான காதல் அது. திடீரென்று ஒரு நாள் அவன் விபத்துக்குள்ளாகி இறந்து விட்டான்.

அவர் மிகவும் நல்லவர். பல இலட்சம் ரூபா சொத்துக்கள் உடையவர். வயது சென்றும் தனது மகள் திருமணத்திற்கு மறுப்புப் சொல்லி வந்தது அவருக்குக் கவலையைக் கொடுத்தது. அத்துடன் அவள் காதலித்தமையால் அவளைத் திருமணம் செய்யவும் யாரும் முன்வரவில்லை.

அவரது நண்பர், அவர் படும் வேதனையைக் கண்டு மனம் இரங்கி அவரின் மகளைத் தனது மகனுக்குத் திருமணம் செய்ய விரும்புவதாகத் தெரிவித்தார்.

அதை அவரது மகள் விரும்பவில்லை. திருமணமான பின் தனது இளமைக்கால வாழ்வால் பிரச்சினைகள் பல வரும் என்று சொன்னாள்.

அதை அறிந்த நண்பரின் மகன் அவளைச் சந்தித்துப் பலமணி நேரம் கதைத்தான். அவனது பேச்சில் ஒழுக்கமும்

நம்பிக்கையும் இருப்பதைக் கண்ட அவள், அவனைத்திருமணம் செய்ய ஒப்புக் கொண்டாள்.

அவர்களுக்குத் திருமணமாகிப் பத்து வருடங்களாகி விட்டன. அவர்கள் மிகவும் சந்தோஷமாக வாழ்கிறார்கள்.

பெண்ணின் தந்தை என்னைக் காணும்போதெல்லாம்; "அவர்கள் தெய்வங்கள்" என்பார்.

எனது இன்னொரு நண்பர் ஒருவர் வர்த்தகம் செய்துகொண்டிருந்தார். பெரும் வர்த்தகர் அவர். திடீரென்று வர்த்தகம் முறிவடைந்ததால் பல இலட்ச ரூபா நட்டம் ஏற்பட்டது. கடன்காரர் தினமும் அவரது வீட்டிற்குச் சென்று மிரட்டி வந்தனர். அதைத் தாங்கிக் கொள்ள முடியாத அவர் தற்கொலை செய்ய முயன்றார். அதை அறிந்த அவரது இனத்தவர் ஒருவர் அவரது கடன் முழவதையும் தீர்த்து வைத்ததோடு மீண்டும் வர்த்தகத்தைத் தொடங்கப் பணம் கொடுத்தார்.

இன்று அவர் நல்ல நிலைக்கு வந்துவிட்டார். வாங்கிய கடனையும் கொடுத்துவிட்டார்; "தான் உயிரோடு இருப்பதற்கும், வசதியாக இருப்பதற்கும் அந்த இனத்தவர் தான் காரணம் என்பார். கடவுளைப் போல உரிய நேரத்தில் அவர் உதவாவிட்டால் நான் அழிந்திருப்பேன். எனது குடும்பமும் அழிந்திருக்கும். அவர் தான் எனது குலதெய்வம்" என்றும் சொல்வார்.

எனது இன்னொரு நண்பரின் மகன் மிகவும் வசதியுள்ளவன். அவனுக்குத் தந்தை பெரும் வரதட்சனையுடன் திருமணம் பேசினார். ஆனால் அவன் அதை விரும்பாமல் இன்னொரு பெண்ணைக் காதலித்துத் திருமணம்

செய்துவிட்டான். அந்தப் பெண்ணின் குடும்பம் மிகவும் வறுமைப்பட்டது. அதனால் அவர் அவர்களைச் சேர்ப்பதில்லை.

அவருக்கு ஏழு பிள்ளைகள். ஆறிற்கும் நல்ல நல்ல இடங்களில் திருமணம் செய்து கொடுத்தார். அத்துடன் தனது சொத்துக்கள் முழுவதையும் காதலித்துத் திருமணம் செய்த மகனைத் தவிர்த்து மற்ற ஆறு பிள்ளைகளுக்கும் பங்கீடு செய்து கொடுத்தார்.

சொத்தைப் பெற்ற மக்கள் ஆறு பேரும் சொத்துப் பங்கீடு செய்த விதம் பிழையானது என்று கூறித் தந்தையுடன் பிரச்சினைப்பட்டுப் பிரிந்து சென்றுவிட்டனர். எனது நண்பரைக் கவனிப்பார் யாரும் இல்லை. அவர் என்னிடம் வந்து குறைப்படுவார். அதனால் நான் அவர் சொத்தைக் கொடுத்த ஆறு பிள்ளைகளிடமும் சென்று அவரைப் பராபரிக்குமாறு கேட்டேன். அவர்கள் பல்வேறு காரணங்களைக் கூறி மறுத்துவிட்டனர்.

காதலித்துத் திருமணம் செய்த மகனின் வீட்டிற்குச் சென்றேன். அவன் முற்றாக மறுத்துவிட்டான். அவனது வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த அவனது மனைவி கலங்கிக் கண்ணீர் வடித்ததை நான் கண்டேன்.

மறுநாள் அவள் எனது வீட்டிற்கு வந்து சொன்னாள்; ‘‘அவர் சற்று முரட்டுத்தன்மை உள்ளவர் தான். எனினும் நல்லவர். நான் சொல்வதைக் கேட்பார். என்னில் அளவுக்கதிகமான அன்பு கொண்ட அவர் எனது விருப்பத்திற்கு மாறாக என்றுமே நடந்ததில்லை. மாமாவை அழைத்து வந்து எமது வீட்டில் வைத்துப் பராமரிக்க அனுமதி தாருங்கள் என்று

கேட்டேன். முதலில் மறுத்து விட்டார். பின்பு எனக்காக ஒத்துக் கொண்டார். அவரை அழைத்துவந்து வீட்டில் விடுங்கள்''

நான் அவரை அழைத்துச் சென்று அவளது வீட்டில் விட்டேன். வருடங்கள் மூன்று கழிந்து விட்டன. நான் அவரைச் சந்திக்கச் செல்வேன். அவரும் என்னைச் சந்திக்க வருவார். வரும் வேளைகளில் மருமகளைப் பற்றித்தான் கூறுவார்.

''உண்மையில் அவள் மஹாலட்சுமி தான். வள்ளுவர் கூறிய அத்தனை குணங்களும் அவளிடம் குடிகொண்டிருக்கு. கணவனின் வருவாயை அறிந்து தான் செலவு செய்கிறாள். அவள் இல்லையென்று கூறியதை நான் இதுவரை அறியவில்லை. எனது மனைவியின் திவசத்தைச் செய்கிறாள். இது என்னை ஆச்சரியப்படுத்தியது. இருபது வருடங்களுக்கு முன்பு எனது மனைவி காலமாகிவிட்டாள். காலமாகி இரண்டு மூன்று வருடங்கள் தான் பிள்ளைகள் வீட்டில் திவசம் செய்தார்கள். பின்பு அவள் இறந்த திதியன்று கோயிலில் அர்ச்சனை செய்வார்கள். ஆனால் இவள் இருபத்தோராவது திவசத்தைச் செய்ய ஆயத்தமாகிறாள். இப்படி ஒரு பெண்ணை நான் இதுவரை கண்டதில்லை. நான் அவனுக்குச் செய்ததை நினைத்தால் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்ற உணர்வு எனது இதயத்துள் உண்டாகும். நான் நீ சொல்லச் சொல்லக் கேளாது எனது சொத்து முழுவதையும் பங்கிட்டுக் கொடுத்ததை நினைக்க வேதனையாக இருக்கு'' என்று தினமும் அழுவார்.

கடவுள் எல்லா உயிர்களுக்குள்ளும் இருக்கிறார். உலகில் வாழ்ந்த மஹான்களெல்லோரும் கடவுளின் அவதாரங்கள் என்று சொல்கிறார்கள். மஹான்கள் மட்டுமல்ல மக்கள் எல்லோரும் கடவுளின் அவதாரங்கள் தான். இதைப்

பலர் புரிந்தாலும் தமது சுயநலங்களுக்காக உதவிகள் ஒத்தாசைகள் செய்யாது வாழ்கிறார்கள்.

எல்லா உயிர்கள் மீதும் அன்பு கொண்டு அவர்களுக்கு உதவி செய்து வாழ்ந்தால், உதவியைப் பெறுபவர்கள் உதவி செய்வோரைத் தெய்வமாக நினைப்பார்கள்.

உலகில் இன்பமாக வாழ்பவர்களின் உயர்வுக்குக் காரணமாக விளங்குவது அனைவரிடமும் அன்பு கொண்டு வாழும் வாழ்க்கையேயாகும். அப்படி வாழ்ந்தவர்கள் தான் பல்லாயிரம் வருடங்கள் கழிந்த போதும் மக்களின் மனதில் வீற்றிருக்கிறார்கள். அவர்கள் தெய்வங்கள்.

விருந்தினர், ஏழைகள், அடியவர்கள், உற்றார் உறவினர்களைப் போற்றி அவர்களுக்கு வேண்டிய வேளைகளில் உதவிகள் பலவும் செய்து வாழ்வோர் தெய்வங்களாகப் போற்றப்படுவார்கள்.

உள்ளம் விரும்பி ஒருவனுக்குப் பொருள் கொடுத்து உதவுவதைவிட முகம் மலர்ந்து இனிய சொற்களைப் பேசுபவர்கள் உயர்ந்தவர்கள்.

நாம் ஒருவருக்கு உதவி செய்யாது இருக்கும் போது அவர் கைமாறு கருதாது செய்யும் உதவிக்கு விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் கொடுத்தாலும் ஈடாகாது. தேவையேற்படும் காலத்தில் ஒருவன் செய்த உதவி அளவில் சிறியதானாலும் அதன் தன்மை உலகைவிடப் பெரியது. இத்தகைய உதவிகளைச் செய்வோர் தெய்வங்கள் தான். தெய்வங்கள் மனிதனுக்கு உதவுவதற்காகத் தினமும் நேரில் வரமுடியாது. ஆகையால் பல நல்ல மனிதர்களைப் படைத்து அவர்களுடாகப் பல நல்ல காரியங்களைச் செய்து

வருகிறது. இதனால் தான் உலகம் வாழ்கிறது. வாழவேண்டும் என்ற நம்பிக்கையும் உண்டாகிறது.

கடவுளின் இருப்பையும் அவரின் இயல்பையும் விவேகானந்தர் மிகவும் சிறப்பாகக் கூறியுள்ளார்.

“உன்னிடமுள்ள தெய்வத்தன்மை தான் கடவுள் என்ற ஒருவர் இருக்கிறார்’ என்பதற்குரிய சான்றாகும். நீ ஒரு தீர்க்க தரிசியாக இல்லாவிட்டால் கடவுளைப் பற்றிய எந்த உண்மையும் ஒருபோதும் இருந்திருக்க முடியாது. நீ கடவுளாக இல்லாவிட்டால் கடவுள் என்ற ஒருவர் இருக்கவில்லை, இனி இருக்கப் போவதும் இல்லை. இந்த உண்மையே வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய இலட்சியம் என்று வேதாந்தம் சொல்கிறது”.

“நாம் ஒவ்வொருவரும் தீர்க்கதரிசியாகவே ஆகவேண்டும். நீ ஏற்கனவே தீர்க்கதரிசியாகத் தான் இருக்கிறாய். இதை நீ உணரவேண்டும்”.

“ஆன்மாவினால் சாதிக்க இயலாத காரியம் எதுவும் இருப்பதாக நீ ஒருபோதும் நினைக்காதே. அப்படி நினைப்பது மதத்திற்கு மிகவும் முரண்பட்ட கருத்தாகும். பாவம் என்று ஒன்று உண்டென்றால், அது நான் பலவீனமானவன், மற்றவர்கள் பலசாலிகள் என்று சொல்வது தான்”

“கடவுள் இல்லாதது என்று எதுவுமே இல்லை என்று வேதாந்தம் சொல்கிறது. உயிருள்ள கடவுள் நீ, என்றும் தெய்வத்தன்மை நிறைந்தவனாக இருந்து கொண்டிருக்கிறாய் எப்போதும் ஒரு தீர்க்கதரிசியாகவே இருக்கிறாய். கடவுளாக இருக்கிறாய். கடவுள் உனக்குள்ளேயே வாழ்ந்து

கொண்டிருக்கிறார். அப்படியிருக்க நீ பல கோயில்களையும் ஆலயங்களையும் சுற்றிக்கொண்டிருக்கிறார். மேலும்; எல்லாவிதமான கற்பனைப் பிதற்றல்களிலும் நம்பிக்கை கொண்டிருக்கிறாய். மனித உடலில் உள்ள ஆத்மா ஒன்று தான் வழிபட வேண்டிய ஒரே கடவுளாகும். எல்லா விலங்குகளும் கூடத் தெய்வத்தின் கோயில்கள் தான்''.

இவ்வாறு சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். சுவாமி விவேகானந்தர் இந்து சமயத் தத்துவங்கள் யாவற்றையும் கற்று, அவற்றை ஆராய்ந்த ஞானி. அவர் கூறிய கருத்துக்களை உலகம் ஏற்றுள்ளது.

அவரின் கூற்றுப்படி மனிதர்கள் எல்லோரும் தெய்வ அவதாரங்கள்; அவர்கள் தீர்க்க தரிசிகள். இவ்வாறானால் நாம் சந்திக்கும் அனைத்து உயிர்களும் கடவுளே.

நல்ல தாயைப் பெற்றவர்கள் கடவுளைக் கண்டவர்களாவார்கள்.

நல்ல தந்தையைப் பெற்றவர்கள் கடவுளைப் கண்டவர்களாவார்கள்.

நல்ல கணவன், மனைவியைப் பெற்றவர்களும் கடவுளைக் கண்டவர்களாவார்கள்.

அன்பான சகோதரர்களை, சுற்றத்தார்களை, நண்பர்களைப் பெற்றவர்கள் கடவுளைப் பெற்றவர்களாவார்கள்.

இறைவனை வணங்குவதால் உடலும் மனமும் சுத்தமாகும். உன்னுள் இருக்கும் பகுத்தறிவைத் தூண்டுவதன் மூலம் உன்னால் பல சாதனைகளைச் செய்ய முடியும். உனது பகுத்தறிவு தூண்டப்படுவதன் மூலம் உன்னுள் இருக்கும் தீயவை அழிந்து, தெய்வத்தன்மை மேலோங்கும்.

அப்படியெழுந்தால் உனது பலம் பன்மடங்கு அதிகரிக்கும். அதனால் சமூகம் நன்மை பெறும்.

உனது பலம் நீ எவ்வளவு பொருளைச் சேர்க்கின்றாய் என்பதில் இல்லை. நீ சேர்த்த பொருட்களை நேர்மையான வழியில் சேர்த்து, அப்பொருளில் தர்மத்திற்கு எவ்வளவு செலவு செய்கிறாய் என்பதில் தான் தங்கியிருக்கிறது.

எல்லா உயிர்களிலும் கடவுள் இருக்கிறார். அந்தக் கடவுளின் இருப்பை உணர்ந்து நடப்பவன் எல்லோருக்கும் நன்மையைச் செய்வான். கடவுளைத் தேடி நாம் செல்லத் தேவையில்லை. நீயே கடவுளாக மாறி எல்லோருக்கும் அனுக்கிரகம் செய்.

இது தான் முன்பு வாழ்ந்த மஹான்களின் கூற்று. அவர்களின் கூற்றுப்படி நடந்து கடவுளாகுவோம்.


Distributed By :
LANKA BOOK DEPOT
F.L. 1.14, Dias Place,
Gunasingapura,
Colombo - 12.
Tel : 011-2-341942
PRICE : 120.00